RAMRAJ
காட்டன்
இந்தியாவின் கலாச்சாரம்

மலர் 10 • இதழ் 8 • பிப்ரவரி 2026 • விலை ரூ.18/-

# வெண்மை

தமிழ் மாத இதழ்
VENMAI

## எண்ணங்கள்






Available at Ramraj Showrooms And All Leading Textile Shops

RAMRAJ
காட்டன்
இந்தியாவின் கலாச்சாரம்

பாசத்துடன் சக மனிதர்களிடம் நெருக்கமாக இணைந்து
நேசத்துடன் செயல்கள் பலவும் செய்யும் மனம் வாய்த்து
வாசம் வீசும் மலரைப் போல வாழ்வை மலரச் செய்யும்

# ‘அன்புடன்...’
## சிறப்பிதழ்

**என்ற இந்த இனிய நூலை நேசத்துடன் வழங்குவதில்
மனநிறைவு கொள்கிறோம்.**



# மதிப்பிற்குரியவர்களுக்கு...

**வணக்கம்.**

நாம் ஒரு கடிதம் எழுத ஆரம்பிக்கும்போது 'அன்புள்ள...' என்றே தொடங்குவோம். அதே கடிதத்தை முடிக்கும்போது 'அன்புடன்' என்று நமது கையெழுத்தைப் போடுவோம். ஒன்றைத் தொடங்குவதற்கும், முடிப்பதற்கும் அன்பே அடிப்படையாக இருக்கிறது. அது வெறும் உணர்வாக மட்டுமின்றிச் செயலாகவும் இருக்கிறது. அன்பு நிறைந்த செயல்பாடு முழுமையானது. தாயன்புடன் ஒருவர் குழந்தைக்கு உணவு சமைப்பதற்கும், வெறும் ஊதியத்திற்காக ஒருவர் சமைப்பதற்கும் நிறைய வேறுபாடு உண்டு. ஆசிரியர் அன்புடன் பாடம் சொல்லிக்கொடுத்தால் எளிதில் புரியவைக்கமுடியும். ஒரு மருத்துவர் கனிவுடன் சிகிச்சை அளித்தால் நோயாளி விரைவில் குணமடைகிறார் என்பது நிரூபிக்கப்பட்ட உண்மை. செயல் இல்லாத அன்பு அர்த்தமற்றதாகவும், அன்பு இல்லாத செயல் பொருத்தமற்றதாகவும் மாறிவிடுகிறது.

ஒரு கிராமத்தில் விளையும் தர்ப்பூசணிப் பழம் மிகவும் பெரியதாகவும், சுவையாகவும் இருக்கும். அந்த ஊரில் விளைந்த பழங்களுக்கு மார்க்கெட்டில் விலை அதிகமாகக் கிடைக்கும். விரைவில் விற்றுத் தீர்ந்துவிடும். அந்த ஊரில் பழங்களை அறுவடை செய்வதற்கு முன்பு ஒவ்வொரு விவசாயியும் அவர்களிடம் விளைந்த மிகவும் சுவையான பெரிய பழங்களைத் தேர்வு செய்து, ஊரில் உள்ள சிறுவர் சிறுமிகளுக்குச் சாப்பிடக் கொடுப்பார்கள். அவர்கள் சாப்பிடும் பழங்களின் விதைகளைக் கீழே போடாமல் பாதுகாப்பாக வாங்கி வைத்து, அதையே அடுத்த விதைப்புக்காகப் பாதுகாத்து வைப்பார்கள். கடவுளுக்குப் படைப்பதைப் போன்று கனிவுடன், தங்கள் வயலில் விளைந்த பழங்களைக் குழந்தைகளுக்குக் கொடுத்துவிட்டே விற்பனைக்கு எடுத்துப் போவார்கள்.

இப்படியான பழக்கம் உள்ள ஊரிலிருந்து வரும் பழங்கள் சில ஆண்டுகளாக அளவில் சிறியதாகவும், சுவை குறைவானதாகவும் இருப்பதை வாடிக்கையாளர்கள் உணர்ந்தனர். அது புகாராக வியாபாரிகளுக்குப் போனது. அவர்கள் விவசாயிகளிடம் இந்தப் பிரச்னையைத் தெரிவித்தனர்.

மற்ற ஊர்ப் பழங்களைவிட அதிக விலைகொடுத்து வாங்கிச்செல்லும் தர்ப்பூசணிப் பழங்கள் ஏன் முன்பு போல் அல்லாமல், அளவில் சிறியதாகவும், சுவை குறைந்தும் இருக்கின்றன எனக் காரணம் அறியமுடியாமல் விவசாயிகள் தவித்தனர். தங்கள் வேலையை அடுத்த தலைமுறையிடம் ஒப்படைத்து வயது மூப்பால் ஒதுங்கி இருந்த வயதான, அனுபவம் மிக்க விவசாயிகள் பிறகு காரணத்தைக் கண்டறிந்தனர். அடுத்த தலைமுறை விவசாயிகள், விலை கூடுதலாகக் கிடைக்கும் என்பதால், பெரிய சுவையான பழங்களை மொத்தமாக விற்பனைக்குக் கொடுத்துவிட்டனர். குழந்தைகளுக்கு சுவை இல்லாத, சிறிய பழங்களைக் கொடுத்து, அவற்றின் விதைகளை வாங்கிப் பாதுகாத்து அதையே விதைத்து வந்தனர்.

முந்தைய தலைமுறை வரை இருப்பதிலேயே பெரிய, சுவையான பழங்களை அன்புடன் குழந்தைகளுக்குக் கொடுத்தபோது, அதேபோலப் பலமடங்கு நன்மை திரும்பக் கிடைத்தது. அடுத்து வந்தவர்கள், 'விலை அதிகமாகப் போகும் பழங்கள் விற்பனைக்கு மட்டுமே' என நினைக்கத் தொடங்கிய பிறகு நிலைமை தலைகீழாக மாறியது. இது வட இந்தியாவில் ஒரு கிராமத்தில் நடந்த கதையாகச் சொல்லப்படுகிறது. உண்மையோ, கற்பனையோ தெரியாது. ஆனால், அன்பு நிறைந்த செயலின் வலிமையைச் சிறப்பாக உணர்த்துகிறது.

நம் மண்ணின் பாரம்பரியத் தொழில்களான உழவும், நெசவும் அன்பு நிறைந்த செயலின் வடிவமாகவே இருந்தன. அக்கறையுடன் விதைத்து, பயிரை வளர்த்து, அறுவடை முடித்து விற்பனை செய்கிற உழவர்களின் உற்பத்தியின் தரம் உயர்வானதாக இருக்கும். உடலுக்குத் தீங்கு தராது. அதேபோல ஒரு நெசவாளர் ஈடுபாட்டுடன் நேர்த்தியாக உடையை நெசவு செய்கிறபோது, அது உடலை மறைப்பதானதாக மட்டும் இருக்காது. எவரையும் அலங்கரித்து, அவர் தோற்றத்தையே அழகாகவும் கம்பீரமாகவும் மாற்றிவிடும்.

'எனக்கு உன்னை ரொம்பப் பிடிக்கும்' என்று ஒருவரிடம் சொல்லும்போது, அன்பு உணர்வாக வெளிப்படுகிறது. அவருக்குத் தேவைப்படும் ஒரு விஷயத்தை அக்கறையுடன் நாம் செய்து தரும்போது, அதே அன்பு செயல்வடிவமாகிப் பயன் தருகிறது. வார்த்தைகளைவிடச் செயல்களுக்கு எப்போதும் மதிப்பு அதிகம்.

உள்ளார்ந்த அன்புடன் செய்யப்படுகிற எந்தச் செயலும் உயர்வானதாகவும், நீடித்த பயன் தருவதாகவும் அமைகிறது. அன்பு நிறைந்த செயல்பாட்டில் தரம் இருக்கும். தவறு நிகழ்ந்துவிடக்கூடாது என்கிற கவனம் அதிகரிக்கும். பாதுகாப்பு உணர்வைத் தரும். செயலைச் செய்யும்போதே மகிழ்ச்சி உண்டாகும். ஊக்கமும் செயல்திறனும் கூடும். எல்லாவற்றுக்கும் மேலாக, மனிதர்களை ஒருவருக்கொருவர் இணக்கமுடன் பிணைக்கும்.

ஸ்காட்லாந்து நாட்டில் ஃப்ளெமிங் என்ற ஏழை விவசாயி இருந்தார். ஒருநாள் வயலில் அவர் வேலை

செய்துகொண்டிருந்தபோது, 'காப்பாற்றுங்கள்... காப்பாற்றுங்கள்...' என்ற அபாயக்குரல் கேட்டது. யாரோ ஆபத்தில் இருக்கிறார் என்பதை உணர்ந்து குரல் வந்த திசையை நோக்கி அவர் ஓடிவந்து பார்த்தபோது, புதைகுழியில் ஒரு சிறுவன் மாட்டிக்கொண்டு உயிருக்குப் போராடியபடி இருந்தான். இன்னும் சிறிதுநேரத்தில் புதைகுழியில் மூழ்கி உயிரை இழந்திருப்பான் என்கிறநிலையில், ஃப்ளெமிங் தன் உயிரைப் பணயம் வைத்து அந்தச் சிறுவனைக் காப்பாற்றினார். அவன் வீடு எங்கு இருக்கிறது என விசாரித்து அழைத்துச் சென்று விட்டுவிட்டு வந்தார்.

அடுத்த நாள் அந்த ஏழை விவசாயியின் வீடு முன்பு கார் வந்து நின்றது. அதிலிருந்து ஃப்ளெமிங்கால் காப்பாற்றப்பட்ட சிறுவன், தன் தந்தையுடன் இறங்கினான். தன் மகனின் உயிரைக் காப்பாற்றியதற்காக அந்தப் பெரும் செல்வந்தர் எந்தப் பரிசுப்பொருளையும் தரத் தயாராக இருப்பதாகக் கூறினார். 'ஒரு குழந்தையைக் காப்பாற்றியதற்குப் பரிசு பெற்றுக்கொள்ளத் தனக்கு விருப்பமில்லை' என்று ஏழை விவசாயி ஃப்ளெமிங் உறுதியாகக் கூறினார்.


தன் மகன் வயதில் ஃப்ளெமிங்கிற்கும் ஒரு மகன் இருப்பதைக் கவனித்தார் செல்வந்தர். 'பணமாகவோ, பொருளாகவோ எதையும் பெற்றுக்கொள்ள வேண்டாம். உங்கள் மகனுக்கு நான் சிறந்த கல்வியை வழங்கினால் அதை ஏற்றுக்கொள்ளுங்கள்' என்று கூறி, தன் மகன் படித்த சிறந்த பள்ளியில் பணம் செலவழித்து ஃப்ளெமிங்கின் மகனையும் படிக்க வைத்தார்.



ஆண்டுகள் ஓடின. மிகச்சிறப்பாக இரண்டு சிறுவர்களும் படித்து முடித்து உயர்கல்வியையும் கற்றார்கள். இரண்டு தந்தைகளின் ஒப்பற்ற அன்பால் வளர்ந்த அந்த இரண்டு குழந்தைகளில் ஏழை விவசாயி ஃப்ளெமிங்கின் மகன் வேறு யாருமல்ல, சர்க்கரை நோய்க்கு 'இன்சுலின்' மருந்தைக் கண்டுபிடித்த உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானி அலெக்சாண்டர் ஃப்ளெமிங்தான். அந்தச் செல்வந்தரின் மகன், உலகப் புகழ்பெற்ற அரசியல் அறிஞர் வின்ஸ்டன் சர்ச்சில்.

ஒரு குழந்தையைக் காப்பாற்றிய தன் அன்பை விலைகொடுத்து வாங்க முடியாது என்பதை ஏழை விவசாயி செல்வந்தருக்கு உணர்த்தினார். அன்பு நிறைந்த அந்தச் செல்வந்தரின் நற்செயல், ஏழை மாணவருக்கு விலைமதிப்பற்ற கல்வியைப் பரிசளித்தது. அந்த அன்பு உலகின் பல கோடிக்கணக்கானவர்களின் துயர் நீக்க துணை நின்றது.

அன்புடன் ஒரு செயலைச் செய்வது என்பது ஒரு கலை. அதைக் கற்றுத் தேர்ந்து வாழ்வில் நடைமுறைப்படுத்தினால் மகிழ்ச்சியும் வெற்றியும் சேர்ந்தே கிடைக்கும். தனிப்பட்ட வாழ்விலும், பணிபுரியும் இடத்திலும், சமுதாயத்திலும் எதிர்மறை எண்ணங்கள் குறைந்து உறவுகள் மேம்படும். ஒருவரிடம் இருந்து மற்றவர்களுக்கும் பரவி உள்ளத்தில் ஒளி உண்டாக்கும். அன்பே ஒளி... அன்பே வழி... அன்புடன் ஒவ்வொரு செயலையும் செய்வோம்.



The Culturepreneur

குரு அருள்

வாழ்க வையகம்... வாழ்க வளமுடன்!

**கே.ஆர்.நாகராஜன்**

நிறுவனர் – ராம்ராஜ் காட்டன்

# அன்பை எப்போதும் கொடுங்கள்!

ஒவ்வொருமனிதரும்தன்வாழ்க்கைத்துணையுடன்தான் அதிக நேரம் மகிழ்ச்சியாக உரையாடியிருப்பார். அதேபோல, வாழ்க்கைத்துணையுடன்தான் அதிகம் சண்டை போட்டிருப்பார். மிக நெருக்கமாக யாருடன் பழகுகிறோமோ, அவர்கள்மீதுதான் நாம் அதிகம் கோபம் கொள்கிறோம். எவ்வளவு ஆரோக்கியமான உறவிலும், ஏதோ ஒரு தருணத்தில் ஒரு சின்ன உரசல், ஒரு நீண்ட வாக்குவாதம், கோபமான ஒரு சண்டை நிகழ்வது இயல்பு. ஆனால் அது எப்படி முடிகிறது என்பது முக்கியம். அனல் வார்த்தைகளைத் தவிர்த்து அன்பையே கொடுக்க என்ன செய்ய வேண்டும்?

### கோபத்தில் தவிருங்கள்:

கண்மண் தெரியாத கோபத்தில் இருக்கும்போது, சின்னச் சின்ன விஷயங்களுக்குக்கூட உஷ்ணமான வார்த்தைகள் உதடுகளிலிருந்து வெளிப்படும். நீங்கள் செய்யும் தவறை உணரவே மாட்டீர்கள். வாழ்க்கைத்துணை செய்யும் நல்ல விஷயம்கூடத் தவறாகவே தெரியும். அதனால் கோபத்தில் வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. ததும்பி வழியும் ஒரு தொட்டியிலிருந்து தண்ணீரை வேகமாகத் திறந்துவிட்டால் எப்படி அந்தத் தொட்டியின் சுமை குறையுமோ, அப்படி கோபத்தை வெளியேற்றிவிட்டால் மன பாரம் குறையும். உங்கள் வாழ்க்கைத்துணை செய்திருக்கும் ஒரே ஒரு கெட்ட விஷயம் உங்கள் கோபத்தைத் தூண்டியிருக்கலாம். அதை மறந்துவிட்டு, அவர் ஏற்கனவே செய்திருக்கும் நல்ல விஷயங்களை நினைத்துப் பாருங்கள். வாக்குவாதம் நெகிழ்ச்சியான அரவணைப்பில் முடியும்.

### குட்டித் தூக்கம் போடுங்கள்:

'கோபத்தை மனதில் சுமந்தபடி இரவில் தூங்கப் போகாதீர்கள்' என்று பலரும் அறிவுரை சொல்லியிருக்கிறார்கள். ஆனால் 'ஒரு குட்டித் தூக்கம் போடக்கூடாது' எனச் சொல்வதில்லை. வாக்குவாதம் முற்றி, கோபம் பொங்கி வழிகிறதா? அதை அப்படியே ஓரமாக ஒதுக்கி வைத்துவிட்டுப் படுத்துக் கொஞ்ச நேரம் தூங்கிவிடுங்கள். கோபத்தில் வாக்குவாதம் செய்வது உடலுக்கும் மனதுக்கும் கேடு. ஆனால், ஓய்வெடுப்பது உடலுக்கு ஆரோக்கியம். அது மட்டுமில்லை, தூங்கி எழுந்த பிறகு மனம் லேசாகும். பிரச்னையைக் கோபமின்றி அலசிப் பார்க்க வைக்கும்.

### மனதுக்குள் பேசுங்கள்:

எந்த ஒரு வாக்குவாதமும் யாரோ ஒருவர் களைத்துப் போகும்வரை முற்றுப்பெறாது. வார்த்தைக்கு வார்த்தை பதில் பேசாமல், கைக்குக் கிடைத்ததைத் தூக்கி வீசாமல், அமைதியாக ஓர் இடத்தில் போய் அமர்ந்துகொள்ளுங்கள். உங்கள் கோபம் குறைந்திருக்காது.



வாக்குவாதத்தில் நீங்கள் என்னவெல்லாம் பேச நினைத்தீர்களோ, அதையெல்லாம் அப்படியே மனதுக்குள் பேசுங்கள். இந்த வார்த்தைகள் எல்லாம் உங்கள் வாழ்க்கைத்துணையை எப்படிக் காயப்படுத்தியிருக்கும் என யோசித்துப் பாருங்கள். அதில் இருக்கும் மோசமான வார்த்தைகளை எல்லாம் நீக்குங்கள். கடைசியில் எதுவுமே மிஞ்சாது. 'நமக்காகவே வாழும் வாழ்க்கைத்துணையை இப்படியா நாம் காயப்படுத்த இருந்தோம்' என வெட்கம் எழும். அதிலிருந்து அன்பு ஊற்றெடுக்கும்.

### அமைதியாக ஒதுக்குங்கள்:

வாக்குவாதங்களில் முக்கியப் பிரச்னையே, பதில்கள்தான். ட்வென்ட்டி 20 போட்டியில், ஒவ்வொரு பந்தையும் அடிக்க வேண்டிய கட்டாயம் கிரிக்கெட் வீரர்களுக்கு இருக்கிறது. பேட்டும் பந்தும் மோதும் ஆக்ரோஷமான ஆட்டமாக அது இருக்கிறது. வாக்குவாதங்களும் அப்படித்தான். ஆனால் டெஸ்ட் கிரிக்கெட்டில் பார்த்தால், மோசமான பந்து வரும்போது அதை அப்படியே தன்னைத் தாண்டிப் போக விட்டு விடுவார் சிறந்த வீரர். அப்படி அமைதியாக உங்களால் ஒதுக்க முடிந்தால் வாழ்க்கை இனிமையாகும்.

### விருப்பம் சொல்லுங்கள்:

யாரும் இன்று இருப்பதைப் போல நாளை இருப்பதில்லை. விருப்பங்களும் ரசனைகளும் மாறிக்கொண்டே இருக்கின்றன. திருமணமான புதிதில் "எனக்கு ஜாங்கிரி பிடிக்கும்" என உங்கள் வாழ்க்கைத்துணை சொல்லியிருக்கலாம். இடையில் சில இடங்களில் மோசமான இனிப்புகளைச் சாப்பிட்டு இந்த ரசனை மாறியிருக்கலாம். இப்படி வாழ்வில் எல்லாமே மாறக்கூடியவை.



வாழ்க்கைத்துணையோடு ஓய்வாக அமர்ந்து பேசுவதில்தான் இதெல்லாம் புரியத் தொடங்கும். உங்கள் ரசனை மாற்றங்களைச் சொல்லுங்கள்; வாழ்க்கைத்துணையின் ரசனை மாற்றங்களையும் கேளுங்கள். இல்லாவிட்டால், "எனக்கு ஜாங்கிரி பிடிக்காதுன்னு தெரிஞ்சும் அதையே வாங்கிட்டு வர்றீங்களே" என ஒரு சண்டை உருவாவதைத் தவிர்க்க முடியாதது.

### ரகசியம் வெளிப்படுத்துங்கள்:

மற்றவர்கள் முன்னிலையில், அவர்கள் அறியாமல் தங்களுக்குள் கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்ள ஒவ்வொரு தம்பதியும் சங்கேத பாஷைகள் உருவாக்கி இருப்பார்கள். சந்தோஷமாக இருக்கும் தருணங்களில் ஒருவரை ஒருவர் அன்போடு அழைப்பதற்கு செல்லப் பெயர்கள், ரகசிய வார்த்தைகள் வைத்திருப்பார்கள். வாக்குவாதம் முற்றுவது போலத் தெரிந்தால், இந்தப் பெயர்கள் அல்லது வார்த்தைகளால் வாழ்க்கைத்துணையை அழைத்து நெருங்குங்கள். சட்டெனக் கோபம் மறைந்து முகத்தில் வெட்கமும் புன்னகையும் எட்டிப் பார்க்கும். அப்புறம் என்ன? கோபம் காணாமல் போய் மகிழ்ச்சி நிறையும்.

### அரவணைத்து அமைதியாக்குங்கள்:

பாத்திரத்திலிருந்து பொங்கி வெளியேறத் துடிக்கும் பாலில் கொஞ்சம் குளிர்ந்த நீரைத் தெளித்தால் அடங்கிப் போகும். அப்படித்தான் எவ்வளவு மோசமான கோபமும் ஒரு சிறு தீண்டலில் அடங்கிக் காணாமல் போகும். வாக்குவாதம் ஒரு முடிவே தெரியாமல் நீளும்போது கைகளையும், விரல்களையும் தவறாகப் பயன்படுத்தக் கூடாது. முகத்துக்கு நேரே விரலை நீட்டி எச்சரித்தால், கோபம் இன்னும் பொங்கும். கையெடுத்துக் கும்பிடுவது நல்ல உத்திதான். ஆனால், "அம்மா தாயே! உன்னைக் கையெடுத்துக் கும்பிடறேன். கொஞ்சம் வாயை மூடறியா?" என்றால் கோபம் தாறுமாறாக எகிறும். செல்லமாகக் கரம் பற்றி, ஆதரவாகத் தோளை வருடி அரவணைத்து, அவருக்குப் பிடித்தவிதமாகத் தொட்டு அமைதியாகப் பேச முயன்றால் எல்லாம் இனிமையே!

### ஃபிளாஷ்பேக் செல்லுங்கள்:

வாக்குவாதம் மிக மோசமாக வளரும்போது அமைதியாக நகர்ந்து சென்று, உங்கள் அலமாரியைத் திறந்து பாருங்கள். உங்கள் திருமண ஆல்பம் அதில் இருக்கும். இருவரும் ஒன்றாகச் சென்ற சுற்றுலாக்களின் மகிழ்வான தருணங்கள் புகைப்படங்களாக இருக்கும். இந்தப் பழைய புகைப்படங்களைப் பார்க்கும்போது, இருவரும் இணைந்து பயணித்த ஆனந்தமான நாட்கள் நினைவுக்கு வரும். அந்த மகிழ்ச்சி, இன்றைய தினத்தின் கசப்பை மறக்கச் செய்யும்.

### மகிழ்ச்சியாக முடியுங்கள்:

ஒரு வாக்குவாதம் என்பது, கருத்து வேறுபாட்டின் ஆரம்பப் புள்ளி. அதுவே அடுத்த சண்டையைத் தவிர்க்க உதவும் முற்றுப்புள்ளியாகவும் இருக்கும். உரசல் தீர்ந்து அமைதியாகப் பேசும் தருணத்தில், 'ஏன் இப்படி நிகழ்ந்தது' என்பதைப்பற்றி ஆராய்ச்சிசெய்யுங்கள். இந்தப்பிரச்னையை இருவருமே கோபப்படாமல் எப்படித் தீர்த்திருக்கலாம் என்பதைப் பற்றியும் பேசுங்கள். எதிர்காலத்தில் அப்படிச் செய்வதாக உறுதி எடுங்கள். வாக்குவாதம் இனிமையாக முடிந்ததை உணர்த்தும்விதமாக இருவரும் இணைந்து ஏதாவது ஒரு மகிழ்ச்சியான செயலில் ஈடுபடுங்கள். டி.வி.யில் காமெடி நிகழ்ச்சி பார்ப்பது, எங்காவது வெளியில் செல்வது, பிடித்த ஏதோ ஒரு உணவைச் சாப்பிடுவது என நீங்கள் விரும்பும் எதுவாகவும் அது இருக்கலாம்! ●



## உரையாடல் செய்யுங்கள்!

வாழ்க்கைத்துணை உங்களோடு பேசும்போது, மனதை எங்கோ வைத்துக்கொண்டு உதடுகளை மட்டும் சும்மா 'ம்' கொட்டாதீர்கள். உரையாடலின் சுவாரசியமே அங்கு இல்லாமல் போய்விடும். என்ன சொல்கிறார் என்பதைக் காதுகொடுத்துக் கேளுங்கள். உங்களைவிட அவரைப் புரிந்துகொள்பவர் வேறு யார் இருக்க முடியும்? கவலைகளைப் பகிர்ந்தால் ஆறுதல் கூறுங்கள். மகிழ்ச்சியைப் பகிர்ந்தால் புன்சிரிப்போடு சந்தோஷ வார்த்தைகளை உதிருங்கள். சாதனைகளைப் பகிர்ந்தால் பாராட்டுங்கள். உரையாடல் என்பது ஒருவர் மட்டுமே பேசி, இன்னொருவர் எந்த ரீயாக்ஷனும் இல்லாமல் கேட்டுக் கொண்டு இருப்பதல்ல.



## அன்பின் பயன் இதுதான்!

எல்லா உறவுகளுக்கும் அடிப்படையாக இருப்பது அன்பு எனும் உணர்வே! நாம் யாரை அன்பு செய்கிறோமோ, அந்த நபருக்கு ஏற்றபடி அது பல வடிவங்களை எடுக்கிறது; பல பெயர்களைப் பெறுகிறது. கணவன் – மனைவி இடையே எழும் அன்பே காதல்; இரண்டு நண்பர்களுக்கிடையே துளிர்க்கும் அன்பே நட்பு; பிள்ளைகள் மீது பெற்றோர் செலுத்தும் அன்பே பாசம்; பெற்றவர்கள் மீது பிள்ளைகள் செலுத்தும் அன்பே நன்றிக்கடன்.

சிலர் வியாபாரத்துக்காகவும் தொழிலுக்காகவும் யார் யாரிடமோ குழையக் குழையப் பேசுவார்கள். ஆயிரம் ரூபாய் லாபம் கிடைக்கிறது என்றால், முகம் தெரியாத நபரிடம்கூட அக்கறையாகப் பேசுவார்கள். ஆனால் விலைமதிப்பற்ற அன்பைச் செலுத்தும் மனைவியையும் குழந்தைகளையும் உதாசீனம் செய்வார்கள். வீட்டில், ஆபீஸில், நட்பு வட்டாரத்தில் தினம் தினம் சந்திக்கும் நம் நேசத்துக்குரியவர்களை வார்த்தை நெருப்பால் சுட்டெரித்து விட்டு, வெளியில் யார் யாரிடமோ அன்பு செலுத்தி என்ன பயன்?



## இதைத் தவிர்த்தால் அன்பு நிலைக்கும்!

வீடுகளும் உறவுகளும் சுருங்கிய இன்றைய குடும்பங்களில் அன்பும் சுருங்கிவிட்டது. ஒன்று அல்லது இரண்டு அறைகளே இருக்கும் வீடுகளில் தனிக் குடித்தனம். கணவன் – மனைவி இருவருமே பணிக்குச் செல்ல வேண்டிய கட்டாயம். குழந்தைகள் ஒன்றோ அல்லது இரண்டோ... இந்தச் சூழலில்தான் வளர்த்து ஆளாக்க வேண்டும். குழந்தைகளைப் பார்த்துக்கொள்ள வீட்டுப் பெரியவர்கள் யாரையாவது அழைக்கலாம் என்றால், இடமும் இருக்காது; வசதியும் கிடையாது.

ஆபீஸிலும் வேலை பார்த்து, குழந்தைகளையும் பராமரித்து, வீட்டுத் தேவைகளுக்காக எல்லா இடங்களுக்கும் ஓடி... எல்லாம் போக கிடைக்கும் நேரத்தில் 'அக்கடா' எனத் தூங்கத் தோன்றுமா? அன்பு செலுத்தத் தோன்றுமா?

ஓய்வற்று உழைப்பதால் எழும் சுய இரக்கமும் பொங்கும் ஆத்திரமும் அப்படியே வங்கி டெபாசிட் போல மனதில் சேர்ந்து கொள்கிறது. யார் மீது அது வெடிக்கும்? அந்நியர்கள் மீதல்ல; பெரும்பாலும் வாழ்க்கைத்துணையும் குழந்தைகளும்தான் இந்தக் கோபத்தை எதிர்கொள்ளும் இலக்குகள் ஆகிறார்கள். நிறைய குடும்பங்களில் விரிசல் ஆரம்பித்து, மீண்டும் இணைய முடியாத இடைவெளியை இருவர் மத்தியில் ஏற்படுத்துவது இந்தக் கோபங்கள்தான். இதைத் தவிர்த்தால் அன்பு நிலைக்கும்.

## நேரம் ஒதுக்குங்கள்!

வேலை முடிந்து, நெரிசலில் பயணித்து, வீடு வந்ததும் களைத்துப் போய் அமர்வார் கணவர். சமையலறையில் வேலையாக இருப்பார் மனைவி. அந்த நேரத்தில் குழந்தை பாடத்தில் சந்தேகம் கேட்கும். "ஏங்க, கொஞ்சம் இவனுக்குச் சொல்லிக் கொடுங்களேன்" என்பார் மனைவி. "ஆபீஸ்ல மாடா உழைச்சுட்டு, வீட்டுக்கு வந்தும் ஓய்வு இல்லையா?" எனக் கொதிப்பார் கணவர். அடுத்த சில நிமிடங்களில் வீடு போர்க்களமாகும். இருவருக்கும் அன்பு இல்லாமல் இல்லை, ஆனால் யதார்த்த வாழ்வின் நெருக்கடிகள் அதை வெளிப்படுத்த விடாமல் தடுக்கிறது. ஒருவர் வேலை செய்யும்போது இன்னொருவர் ஓய்வெடுப்பதுதான் பிரச்னைக்குக் காரணம்.

வீட்டு வேலை, குழந்தைகள் பராமரிப்பு, வெளி வேலைகள் போன்றவற்றைத் திட்டமிட்டு இருவரும் ஒரே நேரத்தில் செய்யுங்கள். கணவர் கடைக்குப் போகிறாரா? அந்த நேரத்தில் மனைவி சமையலை முடித்துவிட்டால், இருவரும் ஒரே நேரத்தில் ஓய்வெடுக்க முடியும். அடிக்கடி இப்படி நேரம் ஒதுக்கி, எங்காவது வெளியில் இணைந்து செல்லுங்கள். ஒரே வீட்டில் இருந்தபடி ஒருவரோடு ஒருவர் பேசிக்கொள்ளக்கூட முடியாதபடி ஓடியாடி வேலை பார்க்கும் தம்பதிகள் நிறைய பேர் உண்டு. அப்படி எப்போதும் இருக்காதீர்கள்!







## பாராட்டுவதும் அன்புதான்!

'வீட்டைத் தாண்டி வெளியில் செய்வதுதானே சேவை' என நினைக்காதீர்கள். கணவனுக்கு மனைவியும், மனைவிக்குக் கணவனும்கூடச் சேவை செய்யலாம். இது ஆண்களின் வேலை, இது பெண்களின் வேலை எனப் பிரிவினைகள் ஏதுமில்லை. வேகவேகமாக மனைவி சமைக்கிறாரா... கணவனுக்கு நேரம் இருந்தால் காய்கறி நறுக்கித் தரலாம். கணவர் அவசர அவசரமாக ஆபீஸ் கிளம்புகிறாரா... மனைவி அவரது டூ வீலரைத் துடைத்து விடலாம். இவை வேலைகள் அல்ல... அவர்மீது நீங்கள் வைத்திருக்கும் அன்பை உணர்த்தும் சேவைகள்!

அதேசமயம்,இப்படிச்சேவைசெய்யும்வாழ்க்கைத்துணையைப் பாராட்டவும் செய்யுங்கள். அவர் செய்வது சாதாரண வேலை இல்லை என்பது போன்ற உணர்வை அவருக்கு இது ஏற்படுத்தும். பாராட்டுக்கும் அங்கீகாரத்துக்கும் கணவன் – மனைவிக்குள் என்ன அவசியம் என நினைக்காதீர்கள்.

## நேசத்தை வெளிப்படுத்தும் பரிசுகள்!

விலை மதிப்பற்ற நகைகள், உடைகள் என எப்போதாவது ஆண்டுக்கு ஒருமுறை வாங்கித் தருவதுதான் பரிசுகள் என்பதல்ல. பிடித்த மைசூர் பாகு, ரசிக்கும் ஐஸ்கிரீம் எனச் சின்னச் சின்னதாக அவ்வப்போது பரிசுகள் கொடுத்தபடி இருங்கள். இவை வெறுமனே பரிசுகள் அல்ல. உங்கள் வாழ்க்கைத்துணையின் ரசனைகளைப் புரிந்து வைத்திருக்கிறீர்கள் என்பதன் அடையாளம்; அவர்மீது தனிக் கவனம்எடுத்து,அவருக்கானவற்றை அன்பாகச் செய்கிறீர்கள் என்பதன் உணர்வு வெளிப்பாடு.



# காணிக்கைக் கணக்கு !

விவசாயி ஒருவர் பெரிய வாழைத்தோட்டம் வைத்திருந்தார். தன் தோட்டத்தில் முதலில் பழுத்த வாழைகளிலிருந்து, சுமார் 100 பழங்கள் உள்ள பெரிய வாழைத் தாரை அறுத்தார். தன் வேலைக்காரனை அழைத்து, "இதைக் கோயிலுக்குக் கொண்டுபோய்க் கொடுத்து விட்டு வா!" என்றார். வேலைக்காரனும் போய்த் திரும்பிவந்து, "கொடுத்துவிட்டேன்" என்றான்.

அன்றிரவு விவசாயி கனவில் வந்த இறைவன், "நீ காணிக்கையாக அனுப்பிய ஒரு வாழைப்பழம் கிடைத்தது" என்றார். திடுக்கிட்ட விவசாயி, "கடவுளே! நான் 100 பழங்களை அல்லவா கொடுத்து அனுப்பினேன்" என்றார். இறைவன் தலையாட்டி மறுத்து, "இல்லை. ஒரே ஒரு பழம்தான் எனக்கு வந்து சேர்ந்தது" என்றார்.

இந்தக் கனவு கலைந்ததும், விவசாயியின் தூக்கமும் கலைந்துவிட்டது. விடிந்ததும் முதல் வேலையாக வேலைக்காரனை அழைத்தார். "நான் கொடுத்த வாழைப்பழங்களை அப்படியே கோயிலில் கொண்டு போய்ச் சேர்த்தாயா?" என்று கேட்டார். அவன், "ஆமாம்" என்றான்.

விவசாயிக்குக் கோபம் வந்து விட்டது. வேலைக்காரன் கன்னத்தில் ஓங்கி அறைந்தார். "உண்மையைச் சொல், இல்லையென்றால் அடித்தே கொன்று விடுவேன்" என்றார். பயந்துபோன அவன், "வழியில் ஏழை ஒருவர், 'பசியாய் இருக்கிறது' என்று கெஞ்சினார். பரிதாபப்பட்டு அவருக்கு ஒரு பழத்தைக் கொடுத்தேன். மீதி எல்லாப் பழங்களையும் கோயிலுக்குக் கொண்டுபோய்க் கொடுத்து விட்டேன். என்னை மன்னித்துவிடுங்கள்" என்றான்.

அந்த ஏழைக்குக் கொடுத்த ஒரு பழமே இறைவனுக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறது என்பது விவசாயிக்கு இப்போது புரிந்தது. ஏழைகளின் வயிறு அஞ்சல் பெட்டி. இறைவனுக்கு அனுப்ப வேண்டிய கடிதத்தை அங்கு போட்டால், அது தவறாமல் இறைவனைச் சென்றடையும். 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்' என்று சொல்லியிருக்கிறார்கள் அல்லவா!

இதேபோல இன்னொரு காணிக்கைச் சம்பவம். கூட்டமாக இருந்த ஒரு விசேஷ நாளில் கோயிலுக்குச் சென்றார் ரமேஷ். வரிசையில் நின்று உண்டியல் அருகே வந்தவுடன் தன் பாக்கெட்டிலிருந்து ஐம்பது ரூபாயை எடுத்து, பலர் பார்க்கும்படி பெருமையாக உண்டியலில் போட்டார். அது கிழிந்து வெளியில் யாரிடம் கொடுத்தாலும் வாங்காத நோட்டு. கடவுள்தானே, அவரிடம் செல்லாதது ஏதேனும் உண்டோ என்று போட்டார்.

ரமேஷ் முன்னால் நகர முயன்றபோது பின்னாலிருந்து ஒருவர் கூப்பிட்டு அவரிடம் 500 ரூபாய் நோட்டு ஒன்றைக் கொடுத்தார். அவருக்கு உண்டியல் தூரமாக இருக்கவே தன்னிடம் கொடுக்கிறார் என நினைத்து, அதை வாங்கி உண்டியலில் போட்டார் ரமேஷ்.

சாமி கும்பிட்டு வெளியில் வந்ததும் அவரை நெருங்கி, "சார்! நீங்கள் உண்மையிலே கிரேட்" என்றார் ரமேஷ். அவர் புரியாமல், "எதற்கு?" என்றார். "நான்கூட உண்டியலில் 50 ரூபாய்தான் போட்டேன். நீங்கள் 500 ரூபாய் போடுகிறீர்களே" என்றார் ரமேஷ். அவரோ, "அது என் பணம் இல்ல சார். உங்களோடதுதான். நீங்க காசு எடுக்கும்போது உங்கள் பாக்கெட்டிலிருந்து அந்த 500 ரூபாய் விழுந்தது. அதைத்தான் எடுத்துக் கொடுத்தேன்" என்றார். ரமேஷ் மயங்கி விழாத குறை.

காணிக்கைக் கணக்கு கடவுளுக்குத் தெரியும். அவர் தனக்குத் தேவையானதை வாங்கிக் கொள்வார். ●



# அன்பும் மரியாதையும்!

'பரஸ்பர மரியாதை இல்லாத அன்பு திசைமாறக்கூடியது, அது சட்டென்று காணாமல் போய்விடும். அன்பு இல்லாத மரியாதை சோர்வடைய வைக்கும், சுகமில்லாமல் ஆக்கும்.' – அறிஞர் ஜோனாதன் ஸ்விப்டின் இந்த வார்த்தைகள் மிக மிக உண்மையாகும்.

அன்பு என்பதே மதித்தல்தான். சக உயிர் மீதான மரியாதைதான் அன்பாக மலரும். அதில்லாமல், "நான் உன்னைப் பாதுகாக்கிறேன். அதனால் உன்னை மதிக்கமாட்டேன். நீ என் மேல் அன்பாக இருக்க வேண்டும்" என்று உத்தரவு போட முடியாது. கட்டாயப்படுத்தி அன்பை வாங்க முடியாது.

"நான் உன் தேவைகளைப் பூர்த்தி செய்கிறேன். அதனால் உன்னை, உன் உணர்வுகளை மதிக்க மாட்டேன். நீ என் மேல் அன்பாகத்தான் இருக்க வேண்டும்" என்று கோர முடியாது. அன்பு என்பது பிசினஸ் கொடுக்கல் வாங்கல் கிடையாது.

"இக்கட்டான நேரத்தில் உனக்கு உதவி செய்தேன். அதனால் உன்னை நான் மதிக்கவெல்லாம் தேவையில்லை. நீ என் மேல் அன்பாய் இரு" என்பதும் வேலைக்கு ஆகாது. அன்பு என்பது நன்றிக்கடன் கிடையாது.

ஒருவருக்குக் கோடி ரூபாய் கொடுத்தாலும், அவருக்கு அன்பான மரியாதை கொடுக்காவிட்டால், தன் சூழ்நிலை காரணமாகப் பணத்தை வாங்கிக்கொள்வாரே தவிர, பதிலுக்கு அன்பை எல்லாம் தரமாட்டார். மரியாதையுடன் சேர்த்து அன்பு கொடுக்கப்படும்போதே, பதிலுக்கு அன்பு கிடைக்கும். இதைத்தான் ஜோனாதன் ஸ்விப்ட் 'மரியாதை இல்லாத அன்பு திசைமாறக்கூடியது, ஆவியாகக்கூடியது' என்று சொல்லியிருக்கிறார்.

'அன்பு இல்லாத மரியாதை சோர்டைய வைக்கும், அது சட்டென்று காணாமல் போய்விடும்' என்று அவர் சொல்கிறார். அலுவலகச் சூழலில் இதைப் பார்க்கலாம். உயரதிகாரியை, கீழே வேலை செய்பவர்கள் மதித்துதான் ஆக வேண்டும். அவர்களும் மதிப்பார்கள், ஆனால் அன்பாக இருக்க மாட்டார்கள். அன்பு இல்லாத மரியாதை, அனுபவிக்க நன்றாக இருக்காது.

கீழே வேலை செய்பவர்களின் நெருக்கடியான தருணங்களில் அவர்களுடன் கூட நின்று அன்பாக இருக்காவிட்டால், அவர்கள் உங்களை மதிப்பார்கள். ஆனால் அன்பாக இருக்க மாட்டார்கள்.

அலுவலக பார்ட்டியில் அவர்கள் ஜாலியாகப் பேசிச் சிரித்துக் கொண்டிருப்பார்கள். நீங்கள் அருகில் சென்றால் அமைதியாகிவிடுவார்கள். சட்டென்று எழுந்து நின்று மரியாதை செய்வார்கள். ஆனால், அந்த மரியாதையை அனுபவிக்க உங்களுக்கு நன்றாக இருக்காது. அது கிடைக்கும்போது சோர்வாக உணர்வீர்கள்.

அன்பும் மரியாதையும் பின்னிப் பிணைந்து இருக்கும்போதுதான் அவை இனிக்கும். அப்படி இரண்டும் நமக்குப் பின்னிப் பிணைந்து நமக்குக் கிடைக்க, நாம் முதலில் அவற்றைப் பிறருக்குக் கொடுக்க வேண்டும். அன்பாய் இருக்கிறோம் என்று மரியாதையை ஒருவருக்குக் கொடுக்காமல் இருக்காதீர்கள். மரியாதை கொடுத்துவிட்டு அன்பைக் குறை வைக்காதீர்கள்.

மரியாதையும் அன்பும் எப்போதும் சேர்ந்திருக்க வேண்டும். •




# ரோட்டரி விழாவில் ராம்ராஜ்!

ரோட்டரி சங்கங்களின் மாவட்ட மாநாடு 'மகிழ்ச்சி 2.0' என்ற தலைப்பில் டிசம்பர் 26, 27 மற்றும் 28 ஆகிய மூன்று தினங்களில் மதுரையில் நடைபெற்றது. இதில் இரண்டாவது நாள் விழாவில் சிறப்பு விருந்தினராக ராம்ராஜ் காட்டன் நிறுவனர் – தலைவர் திரு.K.R. நாகராஜன் அவர்கள் கலந்துகொண்டு 'முதன்மைத் தொழிலாளி' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

"இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் காந்தியடிகள் முன்னெடுத்த இரண்டு ஆயுதங்கள் அகிம்சை மற்றும் வேட்டி ஆகியனவாகும். இவற்றுள் வேட்டியை முன்னெடுக்க மகாத்மாவுக்கு உந்துதல் அளித்த நகரம் மதுரை. இந்த மண்ணில்தான் அவர் நம் பாரம்பரிய அடையாளமான வேட்டிக்கு மாறும் முடிவை எடுத்தார். இந்தியக் கலாச்சார வளர்ச்சியின் முதல் அடையாளம் விவசாயம். அடுத்தது நெசவு. நம் பாரம்பரிய நெசவாளர்கள் உருவாக்கித் தரும் ஆடைகளே நம் அடையாளங்கள். அதிலும் குறிப்பாக வேட்டி, இந்தியக் கலாச்சாரத்தின் முதன்மை அடையாளமாகத் திகழ்கிறது. ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தைப் பொறுத்தவரை இன்றுவரை நான் என்னை முதல் தொழிலாளி என்பதை கருத்தில் கொண்டு செயல்பட்டு வருகிறேன். இதனால்தான் பல சாதனைகள் சாத்தியமாகியுள்ளது" என்று உரையாற்றிய திரு.நாகராஜன், தொழிலில் வெற்றி பெற ஒவ்வொருவரும் தனிமனித அளவில் தங்களுக்குள் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்கள் குறித்தும் சிறப்பாக விவரித்தார்.

ரோட்டரி சங்கங்களின் ஜோன் 3, 17 மற்றும் 30 நிர்வாகிகள், விழாவில் திரு.K.R. நாகராஜன் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி நினைவுப் பரிசு வழங்கிக் கௌரவித்தனர்.







## பொன்மாலைப் பொழுது!

கோவையில் மாபெரும் கர்நாடக இசை நிகழ்ச்சியை நடத்துவதற்கு ராம்ராஜ் காட்டன் நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது. 'பொன்மாலைப் பொழுது' என்ற இந்தக் கர்நாடக இசைக் கச்சேரி, 17.01.2026 சனிக்கிழமை மாலை 6 மணிக்குக் கோவை கிக்கானிக் மேல்நிலைப் பள்ளி அரங்கத்தில் சிறப்பாக நடைபெற்றது. பிரபல கர்நாடக இசைப் பாடகரும் திரை இசைப் பின்னணிப் பாடகருமான திரு.சித் ஸ்ரீராம் அவர்கள் தமது இசைக்குழுவுடன் இணைந்து நடத்திய இந்த இசைக் கச்சேரியில் சுமார் ஆயிரம் பேர் பார்வையாளர்களாகக் கலந்துகொண்டு ரசித்து மகிழ்ந்தனர்.

இந்த விழாவில் பங்கேற்றுக் கச்சேரியைத் தொடங்கிவைத்த ராம்ராஜ் காட்டன் நிறுவனர்–தலைவர் திரு.K.R. நாகராஜன் அவர்கள், "நம் செழுமையான பாரம்பரியம், பண்பாடு மற்றும் கலாசாரம் ஆகியவற்றையும், அவற்றின் அடையாளங்களையும் மக்களிடையே முன்னிறுத்துவதை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது ராம்ராஜ் காட்டன். அதனால்தான், நம் பாரம்பரிய ஆடைகளைப் பெருமிதத்துடன் உருவாக்கித் தருகிறது. தற்போது இசை மற்றும் கலை நிகழ்ச்சிகள் மூலமாகவும் நமது பாரம்பரியப் பெருமையை இன்றைய தலைமுறையிடமும் ஆழமாக நிலை நிறுத்துவதை நோக்கமாகக் கொண்டு இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து இதேபோல விழாக்களை ராம்ராஜ் காட்டன் நடத்தும்" என்று உறுதி அளித்தார்.

## ராம்ராஜ் காட்டன் நிறுவனருக்கு விருது!

சென்னையில் செயல்பட்டு வரும் ஹிந்துஸ்தான் சேம்பர் ஆப் காமர்ஸ் அமைப்பின் 80–வது சேம்பர் தின விழா 22.01.2026 வியாழக்கிழமை அன்று மாலை சென்னை தாஜ் கன்னிமாரா ஹோட்டலில் சிறப்பாக நடைபெற்றது. இந்த விழாவில் தமிழக பால்வளத்துறை அமைச்சர் மாண்புமிகு T. மனோ தங்கராஜ் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். ராம்ராஜ் காட்டன் நிறுவனர்–தலைவர் திரு. K.R. நாகராஜன் அவர்களுக்கு 'BUSINESS EXCELLANCE' விருதினை வழங்கி அவர் பாராட்டினார்.

திரு.K.R.நாகராஜன் அவர்கள் தனது ஏற்புரையில், "எனக்கு வழங்கப்பட்ட இந்த விருது இன்னும் சிறப்பாகச் செயல்படுவதற்கான உத்வேகத்தை அளிப்பதாக அமைந்துள்ளது. உயர்தரமான ஆடைகளை நேர்த்தியாக உருவாக்கித் தந்து, எல்லோரையும் மதிப்பிற்குரியவர்களாக உயர்த்தும் பணியை ராம்ராஜ் காட்டன் செய்துவருவதற்குக் கிடைத்திருக்கும் அங்கீகாரம் இந்த விருது. இதனை மிக உயர்ந்த கௌரவமாகக் கருதுகிறேன்" என்று குறிப்பிட்டார்.

விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் ஹிந்துஸ்தான் சேம்பர் தலைவர் திரு. ரமேஷ் துகார் அவர்கள் வரவேற்றார்.



# அன்பால் இணையும் அழகான குடும்பம்!

இரண்டு பேர் தங்களுக்குள் அன்பான உறவை ஏற்படுத்திக் கொண்டு, அதை ஆயுள் முழுக்க நிலைத்திருக்கச் செய்வதுதான் திருமண உறவின் மகத்துவம். இருவரும் மனதால் இணைந்து ஒருவராகிவிடும் குடும்பங்களில் எந்தப் பிரச்னையும் இருப்பதில்லை. அதற்கு என்னவென்று காரணம் சொல்லாமலேயே அன்பு செலுத்த வேண்டும். 'ஏன்' என்று கேள்வி கேட்காமலேயே நேசிக்க வேண்டும். தேவையற்ற வார்த்தைகளைக் கொட்டி, தேவையான அன்பை இழந்துவிடக்கூடாது. உறவு என்ற கண்ணாடியில் ஒரு சின்னக் கீறலைக்கூட ஏற்படுத்திவிடாமல் இருவரும் பழகுவதே இனிதான வழி. அதற்கு என்ன செய்ய வேண்டும்?

- 'நான் உன்னை நேசிக்கிறேன்' எனத் தினம் தினம் சொல்லுங்கள். இதுதான் அன்பைச் சொல்லும் மிகச் சுலபமான, மிக உன்னதமான வழி. அன்பை மனதில் பூட்டி வைத்திருப்பதில் எந்தப் பயனும் இல்லை. உங்கள் வாழ்க்கைத்துணை உங்களுக்காக என்ன செய்தாலும் இந்த வார்த்தைகளால் அன்பை வெளிப்படுத்துங்கள்.

- இருவரும் திருமண உறவில் இணைந்திருக்கிறார்கள் என்றால், எப்போதும் இருவரும் ஒரே அறைக்குள் இருக்க வேண்டும் என்பதில்லை. வாழ்க்கையின் நிர்ப்பந்தங்கள் நம்மை வேலைக்காக எங்கெங்கோ அலையச் செய்கிறது. ஐந்தாயிரம் மைல் இடைவெளியில் கணவனும் மனைவியும் இருந்தாலும், மாறாத அன்போடு நேசிக்கும் குடும்பங்கள் உண்டு; ஒரே அறையில் இருந்தாலும் வெறுப்போடு ஒவ்வொரு நாளையும் நகர்த்தும் தம்பதிகளும் உண்டு. உங்கள் வாழ்வின் மிக முக்கியமான நபர், உங்களின் வாழ்க்கைத்துணைதான். வேலை காரணமாக வெளியில் சென்றாலும், வெளியூர் சென்றாலும், வெளிநாடு சென்றாலும், "எப்போதும் உன் நினைவாகவேஇருக்கிறேன்" என வாழ்க்கைத்துணையிடம் சொல்லுங்கள். "ஒரு கடை ஷோகேஸில் புடவை ஒன்று பார்த்தேன். இது உனக்கு அழகாக இருக்கும் எனத் தோன்றியது. வாங்கிவிட்டேன்'' என்பது போன்ற உரையாடல்கள்தான் வாழ்வை இனிமையாக்குகின்றன.

- தினமும் காலை முதல் வெவ்வேறு வேலைகளில் மூழ்கிவிடும் கணவனும் மனைவியும் மாலையில் திரும்பவும் சந்தித்துக்கொள்ளும்போது, 'இன்றைய தினம்

எப்படி இருந்தது?' என விசாரித்துச் சில நிமிடங்களாவது உரையாடுங்கள். பகிர்ந்துகொள்ளச் சின்னச் சின்ன சுவாரசிய சம்பவங்கள் இருவரிடமுமே இருக்கும். அந்தப் பகிர்வுகள்தான் உங்கள் ரசனைகளை, கனவுகளை, தவறுகளை, சாதனைகளை உங்கள் வாழ்க்கைத்துணையிடம் உணர்த்த உதவும்.

● எந்த முடிவு எடுத்தாலும் இருவரும் இணைந்து எடுங்கள். கருத்து வேறுபாடுகள் எழுந்தால் விட்டுக் கொடுங்கள். அந்த முடிவை செயல்படுத்தும்போது பின்னடைவுகள் நேரலாம். "நான் அப்போதே சொன்னேனே'' எனக் குத்திக் காட்டாமல், ஆறுதலாகத் துணை நில்லுங்கள். கணவன் – மனைவி என்பவர்கள் வெறுமனே ஒரு தம்பதி மட்டும் இல்லை; அவர்கள் இணைந்து செயல்படும் ஒரு குழு. அந்தக் குழுவுக்குள் ஒரே சிந்தனைதான் இருக்க வேண்டும்.

● தினம் தினம் தூங்கி எழுந்தால் ஒரே மாதிரி வேலை, ஒரே மாதிரிப் பயணம், ஒரே மாதிரி உணவு என வாழ்க்கை கொஞ்ச நாளில் அலுக்க ஆரம்பிக்கும். இதில் வித்தியாசம் காட்டிச் சுவாரசியம் சேர்ப்பது உங்கள் கையில்தான் இருக்கிறது. புதிது புதிதாக எதையாவது செய்து வாழ்க்கைத்துணையை அசத்துங்கள். "நான் உற்சாகமாக ஒவ்வொரு நாளையும் கழிக்க நீயே காரணம்" எனச் சொல்ல வையுங்கள்.

● நீங்கள் தவறுகள் செய்யும்போதோ, கோபத்தில் ஏதாவது சொல்லிவிட்டாலோ, தயங்காமல் மன்னிப்புக் கேளுங்கள். உங்கள் தவறாக இல்லாமல் நேரும் ஒரு சங்கடமான விஷயத்துக்காகவும் நீங்கள் மன்னிப்புக் கேட்பதில் எந்தத் தவறும் இல்லை. வெளியில் எங்கெங்கோ முகம் தெரியாத நபர்களிடம் எல்லாம், எந்தத் தயக்கமும் இல்லாமலே 'சாரி' கேட்கிறீர்கள். வாழ்க்கைத்துணையிடம் கேட்பதில் என்ன தயக்கம்?

● தவறுக்கு மன்னிப்புக் கேட்பது போல, நல்ல விஷயங்களைத் தயங்காமல் பாராட்டுங்கள். ஒரு சமையலை, ஒரு கோலத்தை, ஒரு உடையை, ஆபீஸில் ஒரு புரொமோஷனை, ஒரு புதிய படிப்பில் கிடைக்கும் நல்ல ரிசல்ட்டை... இப்படிப் பாராட்டுவதற்குக் கிடைக்கும் சின்னச் சின்ன சந்தர்ப்பங்களைத் தவற விடாதீர்கள். யார் யாரிடமிருந்தோ பாராட்டுக் கிடைக்கலாம். உங்கள் வாழ்க்கைத்துணைக்கு உங்களிடமிருந்து கிடைக்கும் பாராட்டு முதலானதாகவும் முக்கியமானதாகவும் இருக்க வேண்டும்.

● எப்போதும் அளவுக்கு அதிகமான எதிர்பார்ப்புகள் வைத்துக் கொள்ளாதீர்கள். மனிதர்கள் எப்போதும் எதையும் நேர்த்தியாகச் செய்யக் கூடியவர்கள் அல்ல; அவர்களுக்கும் பழகிய விஷயத்திலேயேகூடத் தவறுகள் நேரும். தவறே செய்யாத ஒருவர்தான் வாழ்க்கைத்துணையாக வேண்டும் என்றால், நீங்கள் ஒரு ரோபோவைத்தான் திருமணம் செய்துகொள்ள வேண்டும். ஆகவே தவறுகளை ஏற்றுக் கொள்ளுங்கள். தவறுகளின்போது தட்டிக் கொடுப்பதுதான் அடுத்த முறை சரியாகச் செய்ய வைக்கும்; அன்பை அதிகம் ஊற்றெடுக்கவும் செய்யும்.

● எவ்வளவு பிஸியான வேலையில் இருந்தாலும், வீட்டில் குழந்தைகள் இருந்தாலும், தினம் தினம் சில நிமிடங்களாவது வாழ்க்கைத்துணையோடு தனியாகப் பேச நேரம் ஒதுக்குங்கள். அவர் உங்களுக்கு எவ்வளவு முக்கியம் என்பதை அவருக்கு உணர்த்துவது இந்த நிமிடங்கள்தான்.

● தாம்பத்ய உறவில் நீங்கள் இருவரும் இணைந்திருக்கிறீர்கள். இதில் யாரும் யாருக்கும் அடிமை இல்லை. ஒருவரை அடிமைப்படுத்தி அன்பு செய்ய வைக்க முடியாது. இருவரும் சமம் என்ற நினைப்பை உறுதி செய்யும்போதுதான் பரிபூரணமான அன்பு மலர்கிறது. ●


RAMRAJ காட்டன் இந்தியாவின் கலாச்சாரம்

# வெண்மை

**VENMAII**

தமிழ் மாத இதழ்

மலர் 10 இதழ் 8

பிப்ரவரி 2026

பதிப்பாளர் - கௌரவ ஆசிரியர்

**கே.ஆர்.நாகராஜன்**

ஆசிரியர்

**த.செ.ஞானவேல்**

இதழாசிரியர்

**வள்ளி**

வடிவமைப்பு

K. **உதயா**

புத்தக ஆக்கமும் வடிவமைப்பும்:
தரு மீடியா (பி) லிட்.,
எண். 188, தரை தளம்,
14வது குறுக்குத் தெரு சந்திப்பு,
டிபென்ஸ் காலனி, ஈக்காட்டுத்தாங்கல்,
சென்னை - 600 032.
கைப்பேசி: 9952920801
email: contacttharu@gmail.com



இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.



Published by
K.R. NAGARAJAN,
Published from
10, Sengunthapuram
Mangalam Road,
TIRUPUR - 641 604.
Ph: 9842274137

# பேரன்பு காட்டுவது சரியா?!

மனிதர்களில் பலரும் தங்கள் மீது யார் மிக மிக அதிகம் அன்பு காட்டுகிறார்களோ, அவர்களைப் பெரிதாகக் கண்டுகொள்வதில்லை. அன்பைப் பொழிந்து தங்களையே சுற்றிவரும் நபர்களை உதாசீனம் செய்கிறார்கள். அதே சமயம் அவர்கள் இன்னொருவர் மீது அன்பு கொள்ளும்போது, அந்த நபர் தன்னை எப்போதும் நினைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

நாம் பிறரிடம் அளவுக்கதிமான அன்பு கொள்ளும்போது என்ன செய்ய வேண்டும், நம் மீது பிறர் அளவுக்கதிமான அன்பு கொள்ளும்போது என்ன செய்ய வேண்டும்? இந்த இரண்டு கேள்விகளுக்கும் John Collier 84 வருடங்களுக்கு முன் எழுதிய 'The Chaser' என்ற சிறுகதை விடையாக இருக்கிறது.

ஆஸ்டின் என்னும் இளைஞன், வேதிப்பொருட்கள் விற்கும் ஒரு கடைக்கு வருகிறான். அங்கே கொஞ்சம் கண்ணாடிக் குடுவைகள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. அவன் உள்ளே நுழைந்ததும் கடைக்காரர் அவனை விசாரித்து வரவேற்கிறார்.

“வித்தியாசமாகக் கடைக்குள் நிறைய மருந்துகள் வைத்திருக்கிறீர்கள் போலிருக்கிறது. எல்லாமே புதிதாக இருக்கின்றன, அதுதான் பார்க்க வந்தேன்” என்கிறான் ஆஸ்டின்.

‘‘பாரப்பா தம்பி. எதை வேண்டுமானாலும் வாங்கிச் செல். ஒவ்வொரு மருந்துக்கும் ஒரு சக்தி இருக்கிறது” என்கிறார் கடைக்காரர்.

ஆஸ்டின் குறிப்பிட்ட ஒரு மருந்தைப் பார்த்து, “இது என்ன” என்று கேட்க, “இது ஒரு வித்தியாசமான மருந்து. இதை ஒருவருக்கு ஒரு துளி சாப்பாட்டில் கலந்து கொடுத்தால் போதும். இரண்டே நிமிடங்களில் அவர் உயிர் பிரிந்துவிடும். சாப்பாட்டில் கலந்தால் வாசனை தெரியாது. ஏன், அவர் இறந்த பிறகு போலீஸார் சந்தேகப்பட்டு போஸ்ட்மார்ட்டம் செய்தால்கூட இந்த மருந்தைச் சாப்பிட்டு உயிரை விட்டார் என்று கண்டுபிடிக்க முடியாது. அதனால்தான் இது விலை அதிகம். ஒரு ஸ்பூன் விலை 5,000 டாலர்” என்கிறார்.

“என்னது? 5,000 டாலரா... விஷத்துக்குப் போய் இவ்வளவு விலையா?” என்று அதிர்ச்சி அடைந்தான் ஆஸ்டின்.

“அதை ஏன் விஷம் என்கிறாய்? வேறு பெயர் சொல்லு. சரி, உனக்கு இது வேண்டாம். உனக்குக் காதல் மருந்து தரவா?”

“காதல் மருந்தா... அது என்ன?”

“இதில் ஒரு ஸ்பூனை உன் காதலிக்குக் கொடுத்தால் போதும். அவள் எப்போதும் உன் பின்னால் சுற்றிச் சுற்றி வருவாள்” என்று ஒரு மருந்தைக் காட்டுகிறார்.

“நிஜமாவா? என் காதலி டயானா அப்படி இல்லையே, அவளுக்கு என்னைப் பிடிக்கும். ஆனால் என்னைச் சுற்றி சுற்றி வரமாட்டேன் என்கிறாளே!” இது ஆஸ்டின்.

“இந்தக் காதல் மருந்தைக் கொண்டுபோய்க் கொடு தம்பி. நிச்சயமாக உன்னை மட்டுமே அவள் நினைப்பாள்!”

“என்னை மட்டுமே நினைப்பாளா?” ஆஸ்டின் முகம் விரிந்தது.





“உன்னை மட்டும் நினைப்பது மட்டுமில்லை. நீ எங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய் என்று உன்னிடம் அக்கறையாக இருந்து எப்போதும் விசாரித்துக்கொண்டே இருப்பாள்.”

“அப்படியா?” ஆஸ்டின் துள்ளிக் குதித்தான்.

“உன்னிடம் வேறு பெண்கள் சும்மா பேசினாலே போதும். உன் டயானா அந்தப் பெண்கள் மீது பொறாமை கொள்வாள். அந்த அளவுக்கு உன் மீது பிரியம் காட்டுவாள்.”

“ஐயோ, என் டயானா என் மேல் அவ்வளவு அன்பாக இருந்தால் எனக்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும்! டயானா மாதிரி ஒரு அழகான பெண் என்னைச் சுற்றிச் சுற்றி வந்தால்... ஆஹா, கற்பனை செய்யவே மகிழ்ச்சியாக இருக்கிறது. தயவுசெய்து இந்தக் காதல் மருந்தைக் கொடுங்கள் ஐயா. விலை என்ன?”

“ஒரு டாலர்தான் தம்பி!”

ஆஸ்டின் அதிர்ச்சி அடைந்தான். “என்ன ஐயா, மனிதர்களைக் கொல்லும் விஷத்தை 5,000 டாலருக்கு விற்கிறீர்கள். ஆனால், அன்பை ஏற்படுத்தும் மருந்தை ஒரு டாலருக்கு விற்கிறீர்கள்?”

“தம்பி, நீ சொல்வது புரிகிறது. ஆனால் இங்கே வந்து காதல் மருந்தை வாங்கிச் செல்லும் இளைஞர்களும் இளம் பெண்களும், சில மாதங்களில் திரும்பவும் வந்து அந்த விஷம் என்ன விலை என்று கேட்கின்றனர். சிலர் அதை வாங்கியும் செல்கின்றனர். அதுதான் என்ன கணக்கு என்று புரியவில்லை” என்று சோகத்துடன் சொன்ன கடைக்காரர், காதல் மருந்தை ஆஸ்டினிடம் கொடுத்தனுப்புகிறார். கதை முடிகிறது.

டயானா தன்னிடம் பேரன்பாகத் தொடர்ந்து இல்லாமல், பட்டும் படாமல் இருப்பதில் ஆஸ்டினுக்கு மனக்குறை. ஆகையால் எப்போதும் அவனைப் பற்றியே நினைக்க வைக்கிற காதல் மருந்தை வாங்கிச் செல்கிறான். அதை டயானாவுக்குக் கொடுத்தால் என்னவாகும்?! அவள் எப்போதும் அவனையே நினைப்பாள், அவனைப் பற்றியே எப்போதும் அக்கறை காட்டுவாள். அன்பைப் பொழிந்துகொண்டே இருப்பாள். ஆஸ்டினுக்கு என்று பர்சனல் ஸ்பேஸ் கொடுக்காமல் அவன்கூடவே எப்போதும் இருப்பாள். அந்த பொசசிவ் உணர்வால், அவன் மீதுள்ள பேரன்பால் அவனிடம் சண்டை பிடிப்பாள்.

ஆறு மாதங்களில் ஆஸ்டினுக்கு வெறுத்துவிடாதா என்ன? ‘ச்சே, என்ன இது வாழ்க்கை’ என்று அதே கடைக்கு ஆஸ்டின் போகலாம். அந்த 5,000 டாலர் விஷத்தை வாங்கி வரலாம். அதற்கு வாய்ப்பு இருக்கிறதுதானே!

இந்தக் கதையை நேரடியாகப் புரிந்துகொண்டு கொதிக்காமல், கொஞ்சம் தத்துவார்த்தமாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

1. ஒருவர் மீது அன்பாக இருப்பது என்பது தொடர்ந்து அவர் நினைப்பாகவே இருப்பதா? அவருடனே இருப்பதா?

2. சரி, அப்படியே இல்லாமல் போனாலும், நெருங்கிய உறவு வளருமா?

3. நம் வாழ்வில் நம்முடைய சுயநலத் தேவைக்காக ஒருவருக்கு அன்பெனும் ‘காதல் மருந்தை’க் கொடுத்துவிட்டு, பிறகு கண்டுகொள்ளாமல் இருக்கும் செயலைச் செய்கிறோமா?

இப்படியெல்லாம் யோசித்தால், ‘ஒருவர் நம் மீது பேரன்பாக இருந்தால் அதை எப்படிக் கையாள்வது’, ‘நமக்கு ஒருவர் மீது பேரன்பாக இருந்தால் அதை எப்படி அவருக்குப் பிடித்த மாதிரி வெளிப்படுத்துவது’ என்பவை புரிந்துவிடும்.

நெருங்கிய ஒருவர் மீது அளவுக்கதிமான பொசசிவ்வாகவும் இருக்கக்கூடாது. அதே சமயம் முற்றிலும் பொசெசிவ்னெஸ் இல்லாமலும் இருக்கக்கூடாது. இரண்டுக்கும் நடுவில் இருக்க வேண்டும். இப்படி இருப்பது கொஞ்சம் கஷ்டம்தான். ஆனால், இதை உணரும்போது, இயல்பாக இதைச் செய்யும் அறிவும், திறமையும், அன்பும் வந்துவிடும். ●



# மாறாத அன்புள்ள உறவு!

நமக்கு இன்பம் தரும் ஒரு செயல், நம் வீட்டிலேயே இன்னொருவருக்கு அவஸ்தையைத் தரலாம். சீரியல் பார்க்கும் மனைவிக்கும் கிரிக்கெட் வெறியரான கணவனுக்கும் வாக்குவாதம் வராத வீடுகள் இருக்குமா? எந்த ஒரு விஷயத்தையும் அடுத்தவர் நிலையிலிருந்து பார்க்கிறவர்கள், யாருக்கும் சங்கடம் தருவதில்லை. தன்னிலிருந்து வெளியேறி, அடுத்தவரின் மனசாட்சியாக நின்று தன்னை விமர்சனம் செய்துகொள்ளும் பக்குவம் இருந்தால் அது சாத்தியமாகும். கணவன் – மனைவி உறவில் அப்படிப்பட்ட பக்குவம் இருவருக்குமே வேண்டும்..

ஒரு தம்பதி இருந்தார்கள். அவர்கள் நள்ளிரவில் கட்டிலில் படுத்திருந்தனர். திடீரென அடித்த சுழற்காற்றில் அவர்களின் வீடு சிக்கிக்கொண்டது. கட்டிலோடு சேர்த்து அவர்களைத் தூக்கி வந்தது சுழற்காற்று. திடுக்கிட்டு விழித்த அவர்கள் பயத்தில் கூக்குரலிட்டனர். காற்றில் சிக்கிக்கொண்ட மற்ற பொருட்களைப் போலவே, அவர்கள் படுத்திருந்த கட்டிலும் சுழன்றது. ஏதோ ரங்கராட்டினத்தில் சுற்றுவது போலச் சுழன்று மயங்கினர்.

அவர்களைத் தூக்கி வந்த காற்று, தொலைதூர மலைப்பிரதேசத்தில் தொப்பென்று கட்டிலோடு அவர்களைப் போட்டுவிட்டுப் போனது. கொஞ்ச நேரத்தில் மயக்கம் தெளிந்து எழுந்த அந்த மனைவி கண்ணீர் விட்டாள். கணவன் ஆறுதல்படுத்தினான். “இவ்வளவு பெரிய விபத்தில் சிக்கினாலும், சின்ன சிராய்ப்புகூட இல்லாமல் தப்பித்துவிட்டோமே. அப்புறம் ஏன் அழுகிறாய்?” என்று கேட்டான்.

‘‘நான் பயத்தில் அழவில்லை. இது ஆனந்தக் கண்ணீர். கல்யாணமான இத்தனை ஆண்டுகளில் நீங்கள் ஆசையாய் எங்காவது என்னை வெளியில் கூட்டிப் போயிருக்கிறீர்களா? ஏதோ இந்த விபத்திலாவது வீட்டைவிட்டு இவ்வளவு தூரம் ஓர் அழகான மலைப்பகுதிக்கு வந்திருக்கிறோமே! அந்தச் சந்தோஷத்தில்தான் அழுகிறேன்” என்றாள் மனைவி.

‘சந்தோஷமான திருமண பந்தம் என்பது, மன்னிக்கத் தெரிந்த இரண்டு பேருக்குள் ஏற்படுவதே’ என்றார் ஓர் அறிஞர். ‘உங்கள் திருமண வாழ்க்கை எப்போதும் பிரகாசமாக இருக்க வேண்டுமா? நீங்கள் தப்பு செய்யும்போது வெளிப்படையாக ஒப்புக்கொள்ளுங்கள். நீங்கள் செய்தது சரிதான் என நினைத்தால், பேசாமல் வாயை மூடிக்கொண்டு இருங்கள்’ என்று யோசனை சொன்னார் இன்னொரு அறிஞர். குடும்ப வாழ்வில் இவற்றைப் பின்பற்றுதல் முக்கியம். இல்லாவிட்டால், கீழே சொல்லும் சம்பவம் போல ஆகிவிடும்.

ஒருவன் ஹோட்டலில் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அப்போது டேபிள் மீது இருந்த செல்போன் ஒலித்தது. அதை ஸ்பீக்கரில் போட்டு, “ஹலோ” சொன்னான்.

எதிர்முனையில் ஒரு பெண் குரல். ‘‘என்னங்க... நான் ஷாப்பிங் வந்தேன். ஐந்து லட்ச ரூபாயில் நெக்லஸ் பார்த்தேன். எடுத்துக்கவா..?”

“எடுத்துக்கோ... உனக்கு இல்லாத பணமா?”

‘‘இருபதாயிரம் ரூபாயில் பட்டுப் புடவை ஒண்ணு எடுத்துக்கறேங்க...”

“ஒண்ணு போதுமா டார்லிங்... இரண்டா எடுத்துக்கோ!”

“சரிங்க... உங்க கிரெடிட் கார்டை எடுத்துட்டு வந்தேன். எல்லாத்தையும் அதில் வாங்கிக்கவா?”


“ஒகே டார்லிங்... தாராளமா வாங்கிக்கோ!” என்று சொல்லிவிட்டு போனை கட் செய்தான்.

சுற்றிலும் இருந்த நண்பர்கள் ஆச்சரியப்பட்டார்கள். “உன் மனைவி இவ்வளவு செலவு பண்றேன்னு சொன்னதுக்குச் ‘சரி’ன்னு சொல்லிட்டே. நீ அவங்க மேல இவ்வளவு அன்பு வைத்திருக்கிறாயே... பெரிய விஷயம்!” என்றனர்.

ஆனால் அவனோ அருகே இருந்தவர்களிடம் விசாரித்துக் கொண்டிருந்தான்... “எக்ஸ்க்யூஸ் மீ... இந்த மொபைல் போன் யாருடையது?” ●


RAMRAJ
mrithu
TOWELS
SOFT LIKE
Foam
MRITHU PREMIUM
BATH TOWELS
BAMBOO TOWELS
SIGNATURE TOWELS
TERRY TOWELS
STRIPED & CHECKERED TOWELS
SUPER SOFT & SUPER ABSORBENT
Available at Ramraj Showrooms and All Leading Textile Shops


RAMRAJ
CULTURE CLUB®
MATCHING DHOTIS • SHIRTS
TIMELESS
DRAPES
TRENDSETTING
SHADES


RAMRAJ
ACHARYA®
PANCHAKACHAM DHOTIS
True Spiritual
Strength Reflected
In Simplicity


Kokhila®
WOMEN'S INNERWEARS
BY
RAMRAJ
Shop Online @ www.ramrajcotton.in

## உங்கள் வீட்டுக்கே வர வேண்டுமா?

# வெண்மை

## சந்தாதாரர் ஆகுங்கள்!



'உயர்ந்த எண்ணங்கள் உலகம் முழுவதும் சென்றடைய வேண்டும்' என்ற உயரிய நோக்கில் மதிப்புமிக்க படைப்புகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது வெண்மை. இந்த மாத இதழ் ஒவ்வொரு குடும்பத்திலும் பாதுகாக்கப்படும் பொக்கிஷமாகத் திகழ்கிறது.

**ஓர் ஆண்டு சந்தா ரூ.200**

**இரண்டு ஆண்டுகள் சந்தா ரூ.380**

காசோலை/வரைவோலை மூலம் அனுப்பலாம். VENMAII என்ற பெயரில் செக்/ டி.டி. அனுப்பவும். பின்புறம் உங்கள் பெயர், ஊர் எழுதவும்.

அல்லது

VENMAII என்ற வங்கிக் கணக்கில் (A/C No:1809135000000299 Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch - IFSC: KVBL0001809) பணம் செலுத்தி, அதன் ஒப்புகை பிரதியை படிவத்துடன் அனுப்பி வைக்கலாம்.

➲ மணியார்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

➲ அனைத்து ராம்ராஜ் ஷோரூம்களிலும் சந்தா செலுத்தலாம்.

**வெண்மை**
ராம்ராஜ் வி டவர்,
10, செங்குந்தபுரம், மங்கலம் ரோடு,
திருப்பூர் - 641 604.
email: venmaii@ramrajcotton.net

சந்தா செலுத்தவும், மொத்தமாக வெண்மை இதழ்களைப் பெறவும் தொடர்புகொள்ளுங்கள்.
போன்:
0421-4304106, 98422 74137

## ஒரே நிமிடத்தில் வெண்மை சந்தாதாரர் ஆகலாம்!

உங்கள் சந்தாவை PhonePe G Pay
Net transfer மூலம் செலுத்துங்கள்.

UPI பரிவர்த்தனை மூலமும் மொபைல் போன் மூலம் வெண்மை வங்கிக் கணக்கில் சந்தா தொகையை செலுத்தலாம். வெண்மை UPI id: kvbupiqr.75626@kvb

Bharat QR code வசதியுள்ள மொபைல் பேங்கிங் ஆப் வைத்துள்ளவர்கள், அதில் இங்கே உள்ள வெண்மை வங்கிக் கணக்கின் QR code –ஐ ஸ்கேன் செய்து சந்தா செலுத்தலாம்.

பணம் செலுத்தப்பட்டதற்கான வங்கித் தகவலை Forward செய்யுங்கள். கூடவே உங்கள் முழு முகவரியையும் அலைபேசி எண்ணுடன் வாட்ஸ்அப் செய்யுங்கள். அலைபேசி எண்: 98422 74137.

**வங்கிக் கணக்கு விவரம்: Venmaii**
**A/C No: 1809135000000299**
**Karur Vysya Bank,Tirupur SR Nagar Branch**
**IFSC Code: KVBL0001809.**



## மாணவ/ மாணவியர் சிறப்பு சலுகை

**(6ம் வகுப்புக்கு மேல் படிக்கும் மாணவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். சந்தா செலுத்தும்போது, மாணவர் அடையாள அட்டை நகலை இணைத்து அனுப்பவும்.)**

ஒரு வருட சந்தா: ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | 2 வருட சந்தா: ரூ.~~380~~ ரூ.250 மட்டும்.



## சீனியர் சிட்டிசன் சிறப்புச் சலுகை

**(60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். பிறந்த தேதிக்கான ஆதாரச் சான்று நகலை இணைத்து அனுப்ப வேண்டும்.)**

ஒரு வருட சந்தா: ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | 2 வருட சந்தா: ரூ.~~380~~ ரூ.250 மட்டும்.

ராம்ராஜ் ஷோரூம்களில் ரூ.10,000க்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்கு
**ஒரு வருட சந்தா பரிசாக வழங்கப்படும்**



## அன்பின் ஹார்மோன்கள்!

தன்னலம் இல்லாமல் சமூகத்துக்கோ, இயற்கைக்கோ நற்செயல் ஒன்றைச் செய்யும்போது, நம் உடலில் செரடோனின் ஹார்மோன் அதிகமாகச் சுரக்கிறது. இது நம் உடலுக்கு ஏராளமான நன்மைகளைத் தருகிறது. கருணையும் அன்பும் காட்டி மற்றவர்களுக்கு உதவும்போது இந்த ஹார்மோன் நன்கு சுரக்கும். அந்த உதவி என்பது எதுவாகவும் இருக்கலாம். அதேபோல, பிற மனிதர்களுடன் நெருக்கம் காட்டும்போது நம் உடலில் ஆக்சிடோசின் ஹார்மோன் சுரக்கிறது. ஒரு குழந்தையைத் தூக்கிக் கொஞ்சும்போது, நீண்ட நாள் கழித்துச் சந்திக்கும் ஒரு நண்பரை அரவணைக்கும்போது, துன்பத்தில் தவிக்கும் உறவினர் ஒருவருக்குத் தோள் தட்டி ஆறுதல் சொல்லும்போது, புது மனிதருடன் கைகுலுக்கி அறிமுகம் செய்துகொள்ளும்போது, இது சுரக்கிறது. இதுவும் உடல்நலனுக்கு நல்லது. எனவே, உடல் ஆரோக்கியமாக இருக்க வேண்டுமானால் சுயநலமற்ற அன்பைச் செலுத்துங்கள்.



## உடனடி கோபம் வேண்டாம்!

சில சூழல்கள் நம்மை ஆத்திரப்பட வைக்கும்; சில தருணங்கள் நம்மை மோசமாகத் திட்டத் தூண்டும். அதுபோன்ற நேரங்களில் தேவையில்லாமல் மோசமான எதிர்வினை நிகழ்த்திவிடுகிறோம். பின்னால் யோசித்துப் பார்க்கும்போது, 'இதை நாம் இப்படிச் செய்திருக்கத் தேவையில்லை' என்று தோன்றும். அதை நினைத்து வருந்துவோம். ஆனால், இப்படிப்பட்ட தவறுகளிலிருந்து பலரும் பாடம் கற்றுக்கொள்வதில்லை. அடுத்து அதேபோல ஒரு சூழல் ஏற்படும்போது, முன்பு செய்த அதே தவறையே திரும்பவும் செய்கிறார்கள். "அந்த நேரத்தில் ஆத்திரம் கண்ணை மறைக்கிறது. அந்தச் சூழலை நிதானமாக எதிர்கொள்ளத் தெரியவில்லை" என்பார்கள்.

எதிர்வினை என்பது அந்தக் கணத்தில் நிகழ்வது. விளைவுகள் பற்றி யோசிக்காமல் இதைச் செய்கிறோம். ஆனால், ஒரு சூழலை எதிர்கொள்வது என்பது நிதானமாகவே நிகழ்கிறது. ஆழமாக யோசித்து இதைச் செய்வோம். அன்பும் ஆதரவும் புத்திசாலித்தனமும் கலந்து முடிவெடுப்போம். 'குழம்பிய குட்டையில் நீர் குடிக்க முடியாது. எல்லாம் தெளிவாகும்வரை காத்திருக்க வேண்டும்' என அறிஞர் லா சூ சொல்வார். அப்படித்தான் இருக்க வேண்டும்.

எல்லாச் சூழல்களிலும் உடனடியாக ஒரு முடிவெடுத்து ஏதோ ஒன்றைச் செய்தாக வேண்டும் என்பது அவசியமே இல்லை. அந்தச் சூழலை இனிமையாக்க என்ன செய்யலாம் என்பதை யோசித்தால், அன்பே வெளிப்படும். மன மகிழ்ச்சிக்கு எப்போதும் குறைவிருக்காது.

## இனிப்பும் கசப்பும் இதுதான்!

முதுமையை எட்டிய துறவி ஒருவர், தன் ஆசிரமத்தில் தனக்கு அடுத்ததாகத் தலைமைப் பொறுப்பேற்க ஒருவரைத் தேர்வு செய்ய நினைத்தார். தன் சீடர்களுக்கு அதற்காக ஒரு போட்டி வைத்தார். ''உலகிலேயே மிக இனிமையான ஒரு பொருளை நாளைக்குக் கொண்டு வாருங்கள்'' என்றார். தேன், கரும்பு, பலா, லட்டு என ஆளாளுக்கு ஏதோ ஓர் இனிப்பைக் கொண்டு வந்திருந்தனர்.

துறவி அதிகம் மதிக்கும் இளம் சீடனோ, தன் கையில் சிறிய பெட்டியை

## அன்பில் சுமை இல்லை!



இளைஞன் ஒருவன் பெரிய பையைத் தூக்கிக்கொண்டு மலை உச்சியை நோக்கி ஏறிக் கொண்டிருந்தான். செங்குத்தான மலை. மேலே ஏற ஏற, சுமை கனத்தது. மூச்சு வாங்கத் தொடங்கியது அவனுக்கு. சற்று தூரம் போனதும், அங்கே ஒரு மலைவாழ் சிறுமி தனது மூன்று வயதுத் தம்பியைத் தூக்கிக்கொண்டு உற்சாகமாக ஏதோ பாட்டுப் பாடியபடி சாதாரணமாக நடந்து போவதைப் பார்த்தான்.

அவனுக்கு ஆச்சர்யம். சிறுமியைப் பார்த்துக் கேட்டான். “என்னம்மா... இவ்வளவு சிறிய பையைத் தூக்கிக்கொண்டே என்னால் மலை ஏற முடியவில்லையே. உன்னால் எப்படி இவ்வளவு பெரிய பையனைத் தூக்கிக்கொண்டு ஏற முடிகிறது?”

அதற்குச் சிறுமி பதில் சொன்னாள். “ஐயா... நீங்கள் தூக்கிக் கொண்டிருப்பது ஒரு சுமையை. ஆனால், நான் தூக்கிக் கொண்டிருப்பதோ என் தம்பியை!”

அவனுக்கு உண்மை புரிந்தது... ‘அன்பு எதையும் சுமக்கும்!’

வைத்திருந்தான். எல்லோரும் கொண்டுவந்த இனிப்புகளைக் கவனித்த துறவி, “பெட்டியில் என்ன இருக்கிறது?” என்று அவனிடம் கேட்டார். அவன் திறந்து காட்டினான். அதற்குள் ஒரு நாக்கின் ஓவியம் இருந்தது. துறவி கேள்விக்குறியுடன் அவனைப் பார்த்தார். “உலகில் நாக்கை விட இனிமையானது எது? நம் நாவில் இருந்துதான் சொற்கள் வருகின்றன. அதை அன்பும் அக்கறையும் கலந்து இனிமையாகப் பேசினால் எல்லோருக்கும் மகிழ்ச்சியும் நிம்மதியும் கிடைக்கும்” என்றான். துறவி அவனைப் பாராட்டினார்.

பிறகு அடுத்த சோதனையை வைத்தார். “உலகிலேயே மிகவும் கசப்பான ஒரு பொருளை நாளை கொண்டு வாருங்கள்!”

மறுநாள் பலரும் வேப்பங்காய், பாகற்காய், எட்டிக்காய், கசப்பு மருந்துகள் என்று கொண்டு வந்திருந்தனர். அந்த இளம் சீடன் இம்முறையும் பெட்டியுடன் வந்தான். எல்லோரது பொருட்களையும் பார்த்துவிட்டுக் கடைசியாக அவனிடம் வந்த துறவி, “உள்ளே என்ன இருக்கிறது?” என்றார். அவன் திறந்து காட்டினான். அதே நாக்கு ஓவியம். “இப்போதும் இதையே காட்டுகிறாயே?” எனத் துறவி கோபித்தார்.

“மோசமான சொற்களைப் பேசும் நாக்கைவிடக் கசப்பான பொருள் இந்த உலகில் இருக்கிறதா? கருணையே இல்லாமல் கோபத்தில் சுடுசொற்களைப் பேசினால், எவரும் விரக்தி அடைவார். நம்மிடம் அன்பாக இருப்பவரும், வெறுப்பு கொள்வார். நண்பர், பகையாக மாறுகிறார். நாக்குதான் உலகிலேயே கசப்பான பொருள்” என்றான் அவன். துறவி அவனையே தலைமைப் பொறுப்புக்குத் தேர்வு செய்தார்.



## இயற்கை போல இருப்போம் அன்பாக!

இயற்கையில் எதுவொன்றும் சுயநலத்துடன் வாழ்வதில்லை. நதிகள் தங்கள் நீரைக் கொண்டு தாகம் தணித்துக் கொள்வதில்லை. மரங்கள் தங்கள் கனிகளைப் புசித்துப் பசியாறுவதில்லை. சூரியன் தன் ஒளியைக் கொண்டு குளிர்காய்வதில்லை. இப்படி அடுத்தவர்களுக்காக வாழ்வது மட்டுமே இயற்கையின் நியதி. சுயநலமற்று இருக்கும் இயற்கை போலவே நாமும் அன்பைப் பொழிவோம்.



# மறுத்தாலும் கொடுத்தாலும் உண்டு அன்பு!

பெருநகரத்தில் வீடு எடுத்துத் தங்கியிருந்தபடி வேலைக்குச் செல்லும் ரவிக்கு ஒரு தினசரி வழக்கம் இருந்தது. மாலை ஆறு மணிக்கு ஆபீஸ் முடிந்து வீட்டுக்கு வரும் வழியில் ஜிம்முக்குப் போவான். அங்கு ஒரு மணி நேரம் உடற்பயிற்சி செய்துவிட்டு வெளியில் வந்ததுமே பசிக்கும்.

வீட்டுக்கு வந்ததும் ஸ்நாக்ஸ் எதையாவது சாப்பிட்டுவிட்டு காபி குடிப்பான். அதன்பிறகு இரவு ஒன்பதரை மணி வாக்கில் ஹோட்டலுக்குப் போயோ, வீட்டிலிருந்து ஆர்டர் செய்தோ சாப்பிடுவான். சரியாகப் பசி இருக்காது என்பதால், அரைகுறையாக எதையோ சாப்பிடுவான். இரவு தூங்குவதற்கு 11 மணி ஆகிவிடும். அந்தத் தூக்கமும் நிம்மதியானதாக இருக்காது. பல நாள் வயிற்றுப் பிரச்சனை, அல்சர் என்று அவதிப்படுவான். காலையில் எரிச்சலாக ஏழு மணிக்கு எழுந்து எட்டு மணிக்குள் ரெடியாகி ஆபீஸ் ஓடுவான்.

ஊரிலிருந்து அவன் அம்மா வந்து மகன் வீட்டில் ஒரு மாதம் தங்கியிருந்தார். அப்போது ரவியின் வழக்கமே மாறியது. வீட்டில் இருந்த ஸ்நாக்ஸ் எல்லாவற்றையும் தூக்கிப் போட்டுவிட்டார் அம்மா. ஏழரை மணிக்கு உள்ளே வரும்போதே, ‘‘பசிக்குதும்மா’’ என்பான் ரவி. உடனே தோசையோ, சப்பாத்தியோ சுடச்சுடக் கொண்டுவந்து தந்துவிடுவார் அம்மா. ‘‘ஸ்நாக்ஸ் இல்லையா? காபி இல்லையா?’’ என்று புலம்பியபடி சாப்பிடுவான் ரவி.

ஒன்பதரை மணிக்கெல்லாம், ‘‘தூக்கம் வருது, படுக்கலாமா?’’ என்று அம்மா போய்விடுவார். கொஞ்சம் கொஞ்சமாக ரவியின் தூக்க நேரம் மாறியது. 10 மணிக்குத் தூங்கினான். அதிகாலையில் எழுந்தான். எரிச்சல், டென்ஷன் இல்லாமல் ஆபீஸ் போக முடிந்தது. தன் வயிற்றுப் பிரச்னைகள் எல்லாம் சரியாகிவிட்டதை அவன் உணர்ந்தான்.

அதே ரவி சில மாதங்களில் சொந்த ஊர் வந்திருந்தான். சில நாட்கள் வீட்டில் இருந்தபடியே பணி செய்ய அனுமதி கிடைத்திருந்தது. காலையில் ஆன்லைனில் ஆபீஸ் மீட்டிங் முடிந்து வேலைகளைச் செய்யும்போது 11 மணிக்கு அவனுக்கு காபி வேண்டும். எவ்வளவு வெயில் கொளுத்தினாலும், சூடாக காபி குடிக்கும் பழக்கம் மாறவில்லை. இதனால் சரியாகப் பசி எடுக்காமல் மதியம் தாமதமாகச் சாப்பிட்டான்.

ஒருநாள் அம்மா காபிக்குப் பதிலாக மோர் கொடுத்தார். அவனுக்கு முகம் மாறியது. ‘‘எனக்கு காபிதான் பிடிக்கும்னு உனக்குத் தெரியாதா?’’ என்று கத்தினான். அம்மா பதிலுக்கு அவனை முறைத்தார். “நான் உன் அம்மா! உனக்கு எது நல்லது, எது கெடுதல்னு எனக்குத் தெரியாதா? இதைக் குடி” என்று கண்டிப்புடன் சொன்னார்.

ரவி அமைதியாக வாங்கிக் குடித்தான். இஞ்சியும் சீரகமும் அரைத்துப் போட்டு, கறிவேப்பிலை, கொத்தமல்லி மிதக்க அமுதம் மாதிரி இருந்தது மோர். குடித்ததும் வயிறு நிறைந்தது. ஆனால், ஒரு மணிக்கெல்லாம் நல்ல பசி எடுத்துச் சாப்பிட வந்துவிட்டான். “சாரிம்மா” என்றான் அம்மாவிடம்!

அப்போது அவன் அம்மா சொன்னது, எல்லோருக்குமான அறிவுரை. “நம்மீது அன்பாக இருக்கும் ஒருவர் நமக்கு எதையாவது கொடுக்க மறுத்தாலோ, அக்கறை எடுத்து எதையேனும் கொடுத்தாலோ, அதற்குக் காரணம் இருக்கும் என்று நம்ப வேண்டும். வாதம் செய்து அவர்களைக் காயப்படுத்தாதீர்கள்!” ●

# பயணங்களின் அன்பு!




மொழி புரியாத ஒரு நகரத்துக்குப் போனார் கணேஷ். ரயில் நிலையத்தில் இறங்கியதும் ஒரு வாடகை காரில் ஏறினார். கார் டிரைவர் அவரை வணங்கி வரவேற்றார். கணேஷ், தான் போக வேண்டிய இடத்தைச் சொன்னார். கணேஷ் பேசிய தமிழோ, ஆங்கிலமோ அந்த கார் டிரைவருக்குப் புரியவில்லை என்றாலும், அவர் சொன்ன இடம் எது என்று புரிந்தது. காரை நகர்த்தினார்.

ஒரு பரபரப்பான நெடுஞ்சாலையில் கார் வேகமாகப் போனது. ஒரு சிக்னலைத் தாண்டும்போது கார் டிரைவர் தனக்குள் ஏதோ பேசிக்கொள்வதைக் கணேஷ் கவனித்தார். டிரைவர் அந்த நேரத்தில் காரின் ஸ்பீடாமீட்டரைப் பார்த்து மனதுக்குள் ஏதோ சொல்லிக்கொண்டார். கார் நீண்ட நேரத்துக்குப் பிறகு அடுத்த சிக்னலில் வலது பக்கம் திரும்பி இன்னொரு சாலைக்குப் போனது. மீண்டும் ஒரு சிக்னலை அடைந்ததும் டிரைவர் திரும்பி காரின் ஸ்பீடாமீட்டரைப் பார்த்துக்கொண்டார்.

கடைசியில் கணேஷ் போக வேண்டிய ஹோட்டலை அடைந்தது கார். மொபைல் போனில் காட்டிய தொகையைவிட 100 ரூபாய் குறைவாகவே கொடுத்தால் போதும் என்றார் டிரைவர். கணேஷுக்கு ஏன் என்று புரியவில்லை. மொழி தெரியாததால், ஹோட்டல் மேனேஜரைக் கூப்பிட்டு விசாரிக்கச் சொன்னார். “நான் திரும்பியிருக்க வேண்டிய சிக்னலைக் கவனிக்காமல் தாண்டிப் போய்விட்டேன். அதனால் நீண்ட தூரம் போய் வேறு இடத்தில் திரும்ப வேண்டியதாகிவிட்டது. என் தவறால் சென்ற தூரத்துக்கு அவரிடம் கட்டணம் வாங்குவது தவறு. அதனால்தான் அதை மறுக்கிறேன்” என்றார் டிரைவர்.

அவரின் நேர்மையில் திகைத்துப் போய் அவரை அரவணைத்துக்கொண்டார் கணேஷ்.

பிரியா சிறுமியாக இருந்த நாட்களில் ஆட்டோ ஒன்றில்தான் பள்ளிக்குச் சென்று வருவாள். அந்த ஆட்டோ டிரைவர் வேலு, மழை நாட்களில் தன் கையில் இன்னொரு குடை எடுத்துக்கொண்டு பள்ளிக்குள் போய்ப் பிரியாவை நனையாமல் அழைத்து வருவார். வீட்டிலும் அதேபோல வாசல் வரை கொண்டுபோய் விடுவார்.

எல்லா நாட்களிலும் அவரிடம் மாறாத ஒரு வழக்கம் இருந்தது. பிரியா ஆட்டோவிலிருந்து இறங்கியதும் ஆட்டோவைக் கிளப்பிக்கொண்டு போய்விட மாட்டார். பிரியா வீட்டுக்குள் போய் வீட்டுக்கதவைச் சாத்திக்கொள்ளும் வரை காத்திருந்துவிட்டு, அதன்பிறகே அவர் கிளம்புவார். பிரியா வளர்ந்து, கல்லூரிக்குப் போக ஆரம்பித்த பிறகு எப்போதாவது விடுமுறை நாட்களில் வேலுவுக்கு போன் செய்து வரச் சொல்லி அவர் ஆட்டோவில்தான் போவாள். அப்போதும் அவர், பிரியா வீட்டுக்குள் போனபிறகே கிளம்புவார்.

பிரியா கல்லூரி முடித்துவிட்டு போலீஸ் உயர் அதிகாரியாக வேலையில் சேர்ந்த பிறகு எப்போதாவது ஊருக்கு வருவாள். அப்போதும் வேலு அவளை வீட்டில் விடும்போது, அவள் வீட்டுக்குள் போனபிறகே கிளம்பினார். ஒரு குழந்தையாக இருந்தது முதல் தன்னைப் பாதுகாப்பாக உணர வைத்த வேலுவுக்குத்தான் தன் திருமணத்தின்போது முதல் அழைப்பிதழைக் கொடுத்தாள் பிரியா.








# கலாச்சார நடை திருவிழாவில் ராம்ராஜ்!

கோவை ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் ‘தினத்தந்தி’ நாளிதழ் சார்பில் கலாச்சார நடை திருவிழா நடைபெற்றது. ராம்ராஜ் காட்டன் நிறுவனம் வழங்கிய இந்த விழாவில் மாவட்ட ஆட்சியர் திரு. பவன்குமார் ஐ.ஏ.எஸ், மாநகராட்சி ஆணையர் திரு.சிவகுரு பிரபாகர் ஐ.ஏ.எஸ் மற்றும் மேற்கு மண்டல ஐ.ஜி திரு.சரவண சுந்தர் ஐ.பி.எஸ் ஆகியோர் கலந்துகொண்டு நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தனர். சிறுவர் முதல் பெரியவர்கள் வரை பலரும் நம் கலாச்சார உடைகளான வேட்டியும் சேலையும் அணிந்துகொண்டு கலாச்சார நடை திருவிழாவில் நடந்தனர். வெளிநாட்டவரும் நம் பாரம்பரிய உடையில் வந்திருந்து வியக்க வைத்தனர்.

ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு.K.R. நாகராஜன் தனது சிறப்புரையில், “நம் முன்னோர்கள் கண்டுபிடித்த கலையை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்கின்ற சாராம்சம்தான் கலாச்சாரம். சுதந்திரப் போராட்டத்திற்கு உதவிய இந்த வேட்டியை, பிரிட்டிஷ் அரசு சென்ற பிறகு எல்லோரும் மறந்துபோயிருந்தனர். நம் ராம்ராஜ் காட்டன் வந்த பிறகு அதை மாற்றி அமைத்தது. வேட்டி கட்டியிருந்தால் அவமானம் என்பதை மாற்றி, வேட்டி கட்டுவதை ஒரு அடையாளமாக மாற்றியிருக்கிறது நம் ராம்ராஜ் காட்டன். அந்த வேட்டியை மதிப்புடன் அணிந்து கலாச்சார நடை செல்வதற்கு ஏராளமானவர்கள் வந்திருப்பதைப் பார்க்கும்போது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது.

எந்த நாட்டிற்குச் சென்றாலும் நீங்கள் பேசினால்தான் இந்தியாவைச் சேர்ந்தவர் என்று தெரியும். ஆனால், உங்கள் உடை வேட்டியாக இருந்தால் அதைப் பார்த்த உடனே ‘நீங்கள் தமிழ்நாடா’ என்று கேட்பார்கள். மருத்துவ ரீதியாக நம் வேட்டியையும் புடவையையும் இடுப்பில் இறுக்கிக் கட்டும்போது சிறுநீரகம், கணையம், கல்லீரல் போன்ற உறுப்புகள் நன்றாக இயங்க உதவுகிறது. இப்படி வேட்டி என்பது வாழை மரம் போல எல்லா வகைகளிலும் உதவிக் கொண்டிருப்பதை நாமெல்லாம் மறந்துவிட்டோம். அதை ராம்ராஜ் காட்டன் திருப்பிக் கொண்டுவந்திருக்கிறது.

பலரும் இந்த வேட்டி கட்டுவதால், கோவை வடவள்ளியிலிருந்து தர்மபுரி வரைக்கும் இருக்கின்ற ஐம்பதாயிரம் நெசவாளர் குடும்பங்கள் பிழைத்துக் கொண்டிருக்கிறன. நீங்கள் கட்டும் வேட்டியால் கலாச்சாரம் மட்டுமல்ல, நெசவாளர்களுடைய வாழ்வாதாரமும் உயரும்” என்று குறிப்பிட்டார்.




# ஸ்டார்ட்-அப் சிங்கம் நிகழ்ச்சியில் ராம்ராஜ்!




இளம் தொழில்முனைவோர்களை அடையாளம் கண்டு ஊக்கப்படுத்துவதற்காக விஜய் டி.வி–யில் ஸ்டார்ட்–அப் சிங்கம் என்ற நிகழ்ச்சி வெளியாகிறது. இதன் இரண்டாவது சீஸன் தொடக்க விழா சென்னையில் நடைபெற்றது. இதன் வழிகாட்டியான 'ஜோஹோ' இணை நிறுவனர் திரு. குமார் வேம்பு, தமிழ்நாடு தொழில்துறை அமைச்சர் மாண்புமிகு டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். இயக்குநர் த.செ.ஞானவேல் எழுதிய 'மைல்கல்' நூல் இந்த நிகழ்வில் அறிமுகம் செய்யப்பட்டது.

ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு.K.R.நாகராஜன் தனது சிறப்புரையில், "ஒரு நெடுஞ்சாலை அருகே முப்பது கோடி ரூபாய்க்கு இடம் வாங்கிப் போட்டால், அது இரண்டு வருடங்களில் நூறு கோடி ரூபாய் ஆகிவிடும் என்று தரகர் ஒருவர் என்னிடம் சொன்னார். அதை நான் மறுத்துவிட்டேன். 'அதற்குப் பதிலாக வங்கியில் இன்னும் இருபது கோடி ரூபாய் கடன் வாங்கித் தொழிற்சாலை கட்டினால், ஆயிரம் பேர் வேலைவாய்ப்புப் பெறுவார்கள்' என்று சொன்னேன். 'அந்தத் தொழிற்சாலையில் இவ்வளவு லாபம் கிடைக்காதே!' என்றார் அந்தத் தரகர். 'நிலம் வாங்கிப் போட்டால் அது சும்மா இருக்கும். அதனால் இந்தச் சமுதாயத்துக்கு நன்மை இல்லை. அந்தப் பணத்தில் தொழிற்சாலை தொடங்கினால், ஆயிரக்கணக்கான தொழிலாளிகளுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்புக் கிடைக்கும். எனக்கும் லாபம் கிடைக்கத்தான் போகிறது' என்று சொன்னேன்.

தொழிற்சாலை கட்டினால் நான் மட்டும் வளரவில்லை. என்னைச் சுற்றி இருக்கும் பலரும் வளர்கிறார்கள் என்பது சிறப்பு. நம் பணத்திற்கு மதிப்பு, எத்தனை பேர் அதனால் பயனடைந்திருக்கிறார்கள் என்பதைப் பொறுத்தே கிடைக்கும்.

தொழில்முனைவோருக்கு எப்போதும் சமுதாயப் பொறுப்பு அவசியம். நம் வளர்ச்சி மட்டும் போதும் என்று நினைக்காமல், நம்மைச் சுற்றி உள்ளவர்களும் வளர வேண்டும் என்ற எண்ணத்தோடு இருந்தால் ஒரு நிறுவனம் நன்றாக வளரும். ராம்ராஜ் காட்டன் நிறுவனமும் அப்படித்தான் வளர்ந்தது. நான் வேட்டி வியாபாரம் செய்ய வந்த காலத்தில் போட்டியாளர்கள் யாரும் இல்லை. நான் வேட்டிக்கு மதிப்பு உருவாக்கி, ஒரு பிராண்டு உருவாக்கி, வேட்டி என்பது நம் பாரம்பரியத்தை மீட்டெடுக்கும் ஒரு விஷயமாகவும் நல்ல லாபம் தரும் தொழிலாகவும் இருக்கிறது என்பதை உணர்த்தினேன். தரமாகக் கொடுத்தால்தான் வாடிக்கையாளர்கள் வாங்குவார்கள் என்ற தர மதிப்பீட்டை ராம்ராஜ் காட்டன் நிறுவனம் மூலம் ஏற்படுத்தினேன். இன்றைக்குப் பல போட்டியாளர்கள் வந்தாலுமேகூட, அவர்கள் ராம்ராஜ் நிறுவனத்தைப் பார்த்துச் செயல்பட்டார்கள் என்பதே நம் நிறுவனத்திற்குக் கிடைத்த சிறந்த வெற்றி. தொழிலில் போட்டி பார்க்காமல் நம்மால் ஊக்கம் பெற்றுப் பலர் அதைச் செய்தார்கள் என்கிறபோது நாம் செய்யும் வேலை சரியாக இருக்கிறது என்று அர்த்தம்" என அவர் கூறினார்.

# அன்பைக் கொடுங்கள்... அன்பைப் பெறுங்கள்!



## அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி

• எதைக் கொடுக்கிறோமோ, அதுதான் நமக்குத் திரும்பி வருகிறது. அன்பைக் கொடுத்தால் அன்பு வரும். இந்த இறைநீதியை உணர்ந்து அதன் வழியே அறநெறி வாழ்க்கை வாழ்ந்தால் நாம் அமைதி, இன்பம், பேரின்பம் அடையலாம். ஒருவரைப் பற்றிக் குறையைச் சொல்வதை விட, அவர்களிடம் உள்ள நல்ல குணங்களையும் செயல்களையும் சுட்டிக்காட்டி அவர்களுக்குப் பாராட்டும் நன்றியும் சொல்லுங்கள். அவருக்கு மட்டுமல்ல நமக்கும் மன அமைதி வருகிறது. சந்தோஷமாகவும் இருக்கலாம். அன்பு இப்படித்தான் பரவுகிறது.

• நமது உடலைப் பாதுகாக்கச் செய்யும் செயல் இறை வழிபாடு அல்லவா? அதுபோல் மற்றவரையும் பாதுகாக்க நாம் செய்யும் செயலும் உதவியும் இறை வழிபாடுதான். இதை உணர்ந்து, பிறரை மதித்து நடத்த வேண்டும். இந்த முறையில் இறைவனை அறிந்தால் அன்பு மலரும். இந்தப் பேரியக்க மண்டலத்தில் உள்ள கோடான கோடி நட்சத்திரங்களை எல்லாம் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாதபடி வைத்துக் கொண்டிருக்கிறதே இதுதான் அன்பு. அன்பு என்றால் ஈர்த்துப் பிடித்துக் கொண்டிருப்பது, கவர்ந்து பிடித்துக் கொண்டிருப்பது.

• அன்பை நாம் பெற வேண்டுமெனில், முதலில் அன்பை நாம் தந்தாக வேண்டும். தன்னை உணர்ந்த உயிருக்கு, அன்பும் கருணையும் எளிதில் புரியும். தன்னை உணர நினைப்பவர்களை, அன்பும் கருணையும் நிறைந்த மனம் இறைநிலையோடு இணைத்து வைக்கும். உலகில் அன்பும் கருணையும் நிலைபெற வேண்டும். இல்லாவிட்டால், தனிமனித அமைதி, குடும்ப அமைதி, உலக அமைதி என்பதெல்லாம் கேள்விக்குறியே!

• அன்புக்கு மேலாக, எல்லாம் நலமாக இருக்க வேண்டி உதவி செய்வது கருணை. இந்த இரண்டும் வேறு வேறு அல்ல. அன்பை உணர்ந்தால் தானாகவே கருணை பிறக்கும். உதாரணமாக, ஒரு குழந்தையைத் தாய் தன்னோடு இணைத்துக் கொண்டிருப்பது, விடாமல் பார்த்துக்கொள்வது அன்பு. அதற்கு மேலாக அதை ஊட்டி வளர்ப்பது கருணை. தாவரங்கள் முதல் எல்லா உயிர்களிடமும் இந்த அன்பைப் பார்க்க முடியும். அன்பும் கருணையும் இறைநிலையின் தன்மைகள்.

• இயற்கையை ஆராய்ந்து பார்த்தால், அன்பும் கருணையும்தான் எங்கும் எதிலும் அமைந்திருக்கக் காணலாம். அன்பு என்பது எந்த ஒன்றையும்

உடலாலோ, மனத்தாலோ தன்னோடு இணைத்துப் பிடித்துக்கொண்டிருப்பது. அப்படி இணைந்துள்ள மற்றொன்றுக்குத் தனது ஆற்றலைத் தொடர்ந்து அளித்து, அதனைக் காத்து வருவது கருணை. குழந்தையைப் பெற்ற தாய், அதனை எப்போதும் தன்னோடு இணைத்துப் பிடித்துக்கொண்டோ அல்லது அது பிரிந்து போய் விடாமல் கண்காணித்துக் கொண்டோ இருக்கிறாள். இது அன்பு. அந்தக் குழந்தை வளர்வதற்கும் வாழ்வதற்கும் தேவையான உணவையும் அது வளரும்வரையில் ஊட்டிக்கொண்டே இருக்கிறாள். இதுதான் கருணை.

● ‘கருவுக்குள் முட்டைக்கும் கல்லுக்குள் தேரைக்கும் உணவை வைத்த இறைவன் என்னை மட்டும் விட்டு விடுவானா’ என்று பழைய பாடல் ஒன்று உள்ளது. நாம் தோன்றுவதற்கு முன்பே, நமக்குத் தேவையானவற்றை இறைவன் பூமியில் படைத்திருக்கிறான் என்பதை அறிவோம். ஒருவருக்கு வாழ்க்கைத்துணை தேவை என்றால் உடனே தயார் செய்யவா முடியும்? எவ்வளவு கருணையோடு நமக்காக உலகின் வேறு எங்கோ ஓர் இடத்தில் அவரைப் படைத்து வளர்த்து நமக்காக அருள்புரிகிறது இறைவனின் கருணை. இதைச் சிந்தித்தால், ஒவ்வொரு விஷயத்திலும் சமுதாயம் நமக்கு உதவி வருகிறது என்பதை அறிய முடியும்.

● தன்னை அறிந்த நிலையில் அன்பும் அறிவும் பிறக்கிறது. அந்நிலையில் ஞானிகள் எல்லாம் சொல்கின்ற ஆன்மநேய ஒருமைப்பாடு மலர்கிறது. அறிவில் பூரணத்துவமும், அடக்கமும், அமைதியும் உண்டாகிறது.

● நாம் அழுத்தமாக ஒரு கருத்தில் நின்று கொண்டு, ‘மற்றவர்களும் இப்படித்தான் நடக்க வேண்டும்’ என்று எல்லை கட்டிக் கொண்டால், நமது விருப்பத்துக்கு ஒத்துவராத எவர் மீதும் வெறுப்பு உண்டாகும். நமக்கு வாழ்வில் என்றுமே நிறைவு ஏற்படாது. மற்றவர்களை அவர்களின் இயல்பான தன்மை மற்றும் செயல்களுடன் ஏற்றுக்கொள்ளவேண்டும்.உலகம்வேண்டுவதையெல்லாம், சமுதாயத்துக்குத் தேவைப்படுவதையெல்லாம் நாம் அளித்துவிட முடியாது. ‘இயன்றதைச் செய்வோம்’ என்ற முடிவில்தான் நிறைவு காண முடியும். அன்புதான் நமது வாழ்வின் ஊற்று. சிறிது வெறுப்பு உணர்வு எழுந்தாலும், அது நமது உள்ளத்தை இனிமை கெடச் செய்யும்.

● அன்பு, பாசம் என்ற இரண்டு சொற்களும் இரண்டு வெவ்வேறுவிதமான நிலைகளைக் குறிக்கின்றன. ‘ஒரு பொருள் தனக்குச் சொந்தம்’ என்று கருதும் கற்பனை மீது எழும் பற்றுதல் நிலையைப் ‘பாசம்’ என்கிறோம். எல்லா உயிரினங்களின் இயல்பையும் அறிந்து, அவற்றின் துன்பங்களைக் குறைக்க வழி தேடும் கனிவிலே ஏற்படும் பற்றுதலை ‘அன்பு’ என்கிறோம். ‘சமுதாயத்துக்கு நான் தொண்டு செய்வேன்’ என்னும்போது அது அன்பு நிலையாகும். ‘என் மனைவியையும் குழந்தைகளையும் அரவணைத்துக் காப்பாற்றுவேன்’ என்னும்போது அது ‘பாசம்’ என்னும் நிலையாகும். ‘மனிதர்களுக்கு நிழல் கொடுக்க மரம் வைக்கிறேன்’ என்றால் அது அன்பின் செயலாகும். ‘எனது கிராமவாசிகளின் நலனுக்காக மரம் நடுகிறேன்’ என்றால் அது பாசம் என்று சொல்லப்படும்.

ஆகவே, ஓர் எல்லைக்குட்பட்ட அறிவின் குறுகிய நிலையே பாசம் எனப்படும். அறிவு என்ற தத்துவத்தையும், அதன் இன்ப துன்ப அனுபவங்களையும் அறிந்து செயல்புரிய எழும் ஆர்வமே அன்பு எனப்படும். ●


**வெண்மை சந்தா...**

# மகளிர் தின சிறப்புச் சலுகை!



மார்ச் 8-ம் தேதி கொண்டாடப்படும் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வெண்மை மாத இதழுக்கான சந்தா தொகையில் இந்த ஆண்டு முழுக்க சந்தா செலுத்தும் பெண்களுக்குச் சிறப்புச் சலுகை வழங்கப்படுகிறது.

**ஓர் ஆண்டு சந்தா: ரூ. ~~200~~/–**
**மகளிர் சலுகை சந்தா: ரூ. 150/–**

**இரண்டு ஆண்டுகள் சந்தா: ரூ. ~~380~~/–**
**மகளிர் சலுகை சந்தா: ரூ. 300/–**

இச்சலுகையை முழுமையாகப் பயன்படுத்தி மகளிர் தங்களையும் தங்கள் இல்லத்தையும் சுற்றத்தையும் இன்னும் சிறப்பாகப் பேணி நலம் பெற வேண்டுகிறோம். (சந்தா செலுத்தும் வழிமுறைகளுக்கு 23-ம் பக்கத்தைப் பார்க்கவும்.)

# கண்மூடித்தனமான *அன்பு* வேண்டாம்!

ஒருவர் மீது கண்மூடித்தனமாக 'வெறியான அன்பு' வருவதை Obsessed Love என்று சொல்லலாம். அவரைத் தவிர வேறு எதுவும் நினைவில் வராத நிலையில் ஒருவித மயக்கத்தில் இருப்போம். பலரும் இந்த Obsessed Love–வில் விழுந்திருப்பார்கள். அதில் விழுந்து எழுந்து, அந்த அனுபவத்தைக் கொண்டு பிறகு கவனமாக இருப்பதே அவர்களுக்கு நல்லது.


### ஒருவர் மீது அதிக ஈடுபாடு இருந்தால் என்னவெல்லாம் ஆகும்?

● என்ன வேலை செய்து கொண்டிருந்தாலும் அவரைப் பற்றிய சிந்தனை வந்துவிடும். அலுவலகத்தில் ஒரு மீட்டிங்கில் பரபரப்பாகக் கலந்துரையாடிக் கொண்டிருப்பார். அப்போது எல்லாமே சரியானது போலத்தான் இருக்கும். ஆனால், அது முடிந்து தனியே இருக்கும்போது அவர் Obsessed Love ஆக இருக்கும் நபரின் நினைவு வந்துவிடும். பிடித்தமான ஏதோ உணவைச் சாப்பிடுவார். அப்போது, அந்த உணவு பற்றி அவர் சொன்ன ஏதோ ஒரு விஷயம் நினைவுக்கு வந்துவிடும். அப்போது, 'அவர் இல்லாமல் இப்படித் தனியாகச் சாப்பிடுகிறோமே' என்று தவிப்பார்கள்.

● இப்படிக் கண்மூடித்தனமாக நேசிக்கும் நபர், இவரின் செயல்களைப் பார்க்க வேண்டும் என்று நினைப்பார். புதிய உடை உடுத்தி இருந்தால் அதை அவர்கள் பார்க்க வேண்டும். ஒரு வாட்ஸ் அப் ஸ்டேட்டஸ் வைத்திருந்தால் அவர்கள் பார்க்க வேண்டும். ஒரு சாதனை செய்திருந்தால் அதை அவரிடம் உடனே பகிர வேண்டும். சின்னதாகவோ, பெரிதாகவோ செய்யும் செயல்கள் எல்லாமே அவருக்குத் தெரிய வேண்டும் என்று நினைப்பார்கள்.

● அவருடன் என்ன பேசினோம், எப்படி நடந்துகொண்டோம் என்பதைத் திரும்பத் திரும்ப மனதுக்குள் ஓட்டிப் பார்த்துக்கொண்டே இருப்பார்கள். நான் பேசியதை அவர் கவனித்தாரா, அவர் ஏன் இப்படிப் பேசினார், ஏன் இப்படி முகபாவனை காட்டினார் என்று அவருடன் இருந்த நிமிடங்களை மனக்கண்ணில் ஓட்டிப் பார்த்துக்கொண்டே இருப்பார். எத்தனை முறை இதைச் செய்தாலும் அது அலுத்துப் போகாது. பரவசமாகவே இருக்கும்.

● இவர் இருக்கும் இடத்தின் பக்கம் அந்த அன்புக்குரிய நபர் வந்தால் அதீத பரபரப்படைவார். அவர் பக்கத்து அறையில் வேறு ஒருவருடன்





பேசிக் கொண்டிருப்பார். இவர் வேறு அறையில் இன்னொருவருடன் பேசிக் கொண்டிருப்பார். ஆனாலும் பரபரப்பாக இருப்பார். அவருடைய இருப்பே இவர் மனதை எல்லையில்லாத பதற்றத்தில் ஆழ்த்திவிடும்.

● ஒருவரின் மனநிலையை Obsessed Love ஆக இருக்கும் நபர்தான் தீர்மானிப்பார். அவர் அன்று காலை நன்றாகப் பேசினால் இவரும் மகிழ்ச்சியாக இருப்பார். அவர் வெள்ளிக்கிழமை சரியாகப் பேசாமல் போனால், இவரது வார இறுதி நாட்கள் நன்றாக இருக்காது. மகிழ்ச்சியற்று இருப்பார். ஒருவரின் மனநிலை எப்படி இருக்க வேண்டும் என்பதை இந்த Obsessed அன்பே தீர்மானிக்கும்.


● அன்றாட வாழ்க்கையே தலைகீழாக மாறிவிடும். அலுவலக வேலையோ, வீட்டுப் பொறுப்புகளோ, எதுவுமே அவருக்குப் பெரிதாகத் தெரியாது. ஒரு நல்ல சினிமா பார்க்க முடியாது. அவர் நினைவு வந்துவிடும். நல்ல இனிப்பு சாப்பிட முடியாது. அவர் நினைவு வந்துவிடும். கிரியேட்டிவ் சிந்தனைகள் சுத்தமாக இல்லாமல் போகும்.

● இவருக்கும் இவர் Obsessed Love–க்கும் உள்ள உறவை மேம்படுத்த இருவருமே முயற்சி செய்ய வேண்டும் என்று முட்டாள்தனமாய் நம்புவார். அந்த நபருக்குத் தனியான வாழ்க்கை இருக்கும். அவருக்கு இவர்மேல் சராசரி அன்பைத் தவிர எதுவும் இருக்காது. தனக்கு அறிமுகமான மற்ற எல்லோரையும் நடத்துவது போலவே இவரையும் நடத்துவார். ஆனாலும் பின்னாலே போய் அன்பு காட்டுவார். பதிலுக்கு அன்பு கிடைக்காதபோது தன்னையே நொந்துகொள்வார்.

● 'என் அன்பைப் புறக்கணிக்கிறாயே, என்னதான் நினைத்துக்கொண்டிருக்கிறாய்' என Obsessed Love–விடம் பெரிய சண்டை பிடிக்க வேண்டும் என்று நினைப்பார். ஆனால் அவர் நேரில் பார்க்கும்போது ஒரு வார்த்தை அன்பாகப் பேசிவிட்டால் அப்படியே அமைதியாகி விடுவார். சண்டை எல்லாம் மறந்து மனம் நிம்மதி ஆகிவிடும்.

● தினசரி 'வணக்கம்' சொல்லவில்லை என்று குற்றம் கண்டுபிடிப்பார். அவர் தினசரி சொன்னால், "அதைத்தான் சொல்கிறீர்கள், ஆனால் நன்றாகப் பேசுவதில்லை" என்பார். நன்றாகப் பேசினால், "ஏதோ நாடகத்தனமாகப் பேசுகிறீர்கள்" என்பார். Obsessed Love ஆக நேசிக்கும் நபர் எவ்வளவு அன்பைக் கொடுத்தாலும், இவருக்குப் புதிது புதிதாக ஒரு மனத்தாகம் ஏற்பட்டு அந்தத் தாகத்தை அவர் தீர்க்கவில்லை என்ற குற்றச்சாட்டை அவர் மீது சுமத்துவார்.

● அவரை மறந்துவிட நினைப்பார். நெருங்கிய நண்பர்களிடம் சில சமயம் சொல்லிப் புலம்புவார். ஆனால் அவர்கள் மறக்க ஏதாவது ஐடியா சொன்னால், அதற்குப் பயப்படுவார். 'எங்கே அவரை மறந்து விடுவோமோ' என்ற



கவலை வந்து, நண்பர்களிடம் அந்த டாப்பிக் பேசுவதைத் தவிர்ப்பார்கள்.

18 – 28 வயதுக்குள் ஒருவர் இந்தப் பித்துப் பிடித்த நேசிப்பை இன்னொருவர் மேல் வைத்திருந்தால் உண்மையிலேயே அவர் பாக்கியவான். காரணம், அப்படி அமையும் அன்பான நபர் இவருக்கு வாழ்க்கைத்துணையாக வரவும் வாய்ப்பு உள்ளது. அப்படி இல்லாமல் போய், ஒருமுறை இந்த Obsessed Love உறவில் அடிவாங்கி அனுபவமாகிவிட்டால், வாழ்க்கை முழுவதும் அதுபோன்ற சூழ்நிலையில் அவர் கவனமாக இருந்துகொள்வார். 'இது நம்மைப் பித்துப் பிடிக்க வைத்து, பைத்தியமாக அலையவிடும்' என்று முதலிலேயே உஷாராகிவிடுவார். நேசிக்காமல் இருக்க மாட்டார். ஆனால் அந்த நேசம் அதீத பித்தமாகாமல் பார்த்துக்கொள்வார்.

ஆனால், 30 வயது கடந்தபின் வேறு யாரோ ஒருவரிடம் முதன்முறையாக Obsessed Love ஆக இருக்கும்போது திணறிவிடுவார். காரணம், அந்த வயதில் சமூகத்தில் ஒரு நல்ல நிலையில் இருப்பார். குடும்பம் இருக்கும். 'நான்தான் எல்லாம்' என்பது போன்ற ஈகோ கன்னாபின்னாவென்று வளர்ந்திருக்கும். அப்போது ஒருவர் வாழ்வில் வந்து, அன்புக்காக ஏங்கும் நாய்க்குட்டி போல ஆக்கும்போது, தன்மானத்துக்கும் காதலுக்கும் இடையே தவித்துப் போய்விடுவார்.

அதை ஒரு சுகமாக நினைக்காமல், உளவியல் பிரச்னையாக உணர்ந்துகொண்டாலே பாதிப் பிரச்னை முடிந்தது. அதிலிருந்து எளிதில் வெளியே வரும் முயற்சிகளை எடுக்க ஆரம்பித்து விடுவார். மாறாக Obsessed Love என்பதை ஒரு சுகமாக, வாழ்க்கைப் பிடிப்பாக நினைத்து, வெறித்தனமாக அன்பு காட்டும் சுழலில் மாட்டிக்கொண்டார் என்றால் பாவம்! திரும்பிப் பார்க்கும்போது காலமும் உழைப்பும் வாழ்க்கையை விட்டு ஓடிப்போயிருக்கும். அர்த்தமே இல்லாமல் புலம்பிக்கொண்டு இருந்ததை நினைத்து வெட்கமும் வேதனையும் அடைய ஆரம்பிப்பார். ●



# உறவாக மாற்றும் அன்பு!

ஒருவர் மீது அன்பு செலுத்தும் எவரும் எளிதில் உறவாகிவிட முடியும். 'அண்ணா', 'அக்கா' என்று அப்படி அழைக்கப்படும்போது கிடைக்கும் உணர்வே தனி!

நகரத்தின் அமைதியான பகுதி ஒன்றில் கிளினிக் வைத்திருந்தார், குழந்தைகள் டாக்டர் ஒருவர். ஒரு மாலை நேரத்தில் இரண்டு பையன்கள் அவரிடம் அவசரமாக ஓடிவந்தார்கள். "எங்க ஹாஸ்டல்ல ஒரு பையனுக்கு வலிப்பு வந்து தவிக்கிறான் டாக்டர், காப்பாத்துங்க" என்றார்கள். டாக்டர் அவசரமாக அவர்களுடன் கிளம்பிப் போனார்.

அருண் என்ற அந்த ஐந்து வயதுச் சிறுவன், வலிப்பு வந்து துடித்துக் கொண்டிருந்தான். அவசர முதலுதவிகள் செய்து வலிப்பை நிறுத்தினார். பிறகுதான் அந்தச் சிறுவனைக் கவனித்தார். ஏதோ நரம்புக்கோளாறு காரணமாக இரண்டு கைகளும் செயலிழந்த நிலையில் இருந்தான் அவன். அருணைப் பரிசோதித்து, "பயப்படாதே! இது ஒன்றும் பெரிய பிரச்னை இல்லை, சீக்கிரம் சரி செய்துவிடலாம்" என நம்பிக்கை தந்துவிட்டுப் புறப்படத் தயாரானார்.

அப்போதுதான் அந்த விடுதியை முழுதாகக் கவனித்தார். அது ஆதரவற்ற குழந்தைகளுக்கான விடுதி. அங்கு பல குழந்தைகளும் ஏதோ ஒரு பாதிப்பு கொண்ட மாற்றுத்திறனாளிகள். குடும்பத்தால் கைவிடப்பட்ட குழந்தைகளைத் தாங்கள் பராமரிப்பதாக விடுதி நிர்வாகி சொன்னார்.

மறுநாள் தன் கிளினிக் செல்வதற்கு முன்பாக அந்த விடுதிக்குப் போனார் டாக்டர். "அருண் இதுவரைக்கும் யார்கிட்டயும் பேச மாட்டான் டாக்டர். நீங்க வந்து பார்த்துட்டுப் போன பிறகுதான் சிரிச்சுப் பேசறான்" என்றார்கள் மற்ற சிறுவர்கள். அருணிடம் சில நிமிடங்கள் பேசிவிட்டுக் கிளம்பினார் டாக்டர்.

அதன்பின் வாரம் ஒருநாளாவது அங்கு சென்று, நோயில் இருக்கும் குழந்தைகளுக்குச் சிகிச்சை அளிப்பது அவர் வழக்கமானது. அவர் கண்ணெதிரே அருணுக்குள் மாற்றங்கள் நிகழ்ந்தன. அதற்கு முன்புவரை அவனுக்கு யாராவது ஊட்டிவிட வேண்டும். இப்போது தன் கால்களால் ஸ்பூனைப் பிடித்துச் சாப்பிடப் பழகினான். தனக்கான எல்லா வேலைகளையும் இப்படிக் கால்களால் செய்துகொண்டான்.

ஒருநாள் டாக்டர் அங்கு போனபோது சில பையன்கள் அவரிடம் ஒரு பேப்பரை நீட்டினார்கள். அதில் அழகிய ஓவியமாக டாக்டர் இருந்தார். அருண் தன் கால்களால் பென்சில் பிடித்து வரைந்தது என்று சொன்னார்கள். டாக்டர் அதைப் பார்த்து நெகிழ்ந்துவிட்டார். உடனே கலர் பென்சில்கள், பெயின்ட், போர்டு என ஓவியம் வரைய எல்லாப் பொருட்களும் வாங்கிக் கொடுத்தார். அருண் மகிழ்ச்சியுடன் நன்றி சொன்னான். விடுதிக்கு அருகில் இருக்கும் ஓவிய ஆசிரியர் ஒருவரைத் தேடிப் பிடித்து அருணுக்குப் பயிற்சி தரவும் ஏற்பாடு செய்தார் டாக்டர்.

அருணுக்குச் சில ஆண்டுகளில் புகழ்பெற்ற ஓவியப் பள்ளியில், ஸ்காலர்ஷிப்புடன் பயிற்சி பெற வாய்ப்புக் கிடைத்தது. அதில் அருணைவிட அதிகம் மகிழ்ந்தவர் டாக்டர்தான்.

இன்று அருண் தன் கால்களால் வரையும் ஓவியங்கள் உலகெங்கும் கண்காட்சிகளுக்குப் போகின்றன. அதிக விலைக்கு விற்கின்றன. விடுதியில் இருக்கும் சக நண்பர்களுக்காகவே அதைச் செலவழிக்கிறான் அருண். அந்த விடுதியில் இப்போது பாடகி, விளையாட்டு வீரர், எஞ்சினியர் என்று பலர் உருவாகி வருகின்றனர். எல்லோரும் தங்கள் வாழ்க்கையை மாற்றிய அந்த டாக்டரை 'டாக்டர்' என்று அழைப்பதில்லை. 'அண்ணா' என்றுதான் உறவு கொண்டாடுகிறார்கள். ●

# எதிர்பாராத ஒன்று!



ஒரு வெள்ளிக்கிழமையின் மதிய நேரத்தில் முதியவர் ஒருவர் ஒரு சிறுநகரத்தின் மலைக்கோயிலுக்கு அருகே வந்திருந்தார். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மலைக்குப் போய் முருகனைக் கும்பிட்டுவிட்டுக் கீழே வந்து சிலருக்கு அன்னதானம் செய்வது அவரது வழக்கம். அன்றும் அப்படித்தான் செய்ய வந்திருந்தார்.

பலருக்கும் கொடுத்தது போக அவர் கையில் இரண்டு உணவுப் பொட்டலங்கள் மிச்சம் இருந்தன. அவர் தனது வாகனத்தை நிறுத்திய இடத்தில் மூன்று சிறுமிகள் நின்றிருந்தார்கள். அவர்களில் இரண்டு சிறுமிகள் வேகமாக ஓடிவந்து, “பசிக்குது ஐயா, சாப்பாடு இருந்தா கொடுங்க” என்று கேட்டார்கள். மூன்றாவது சிறுமி சற்றுத் தயக்கமும் குழப்பமுமாக அவரை நெருங்கினாள். சைகை மொழியில் வயிற்றைத் தொட்டுக் காட்டி, வாயருகே கையைக் கொண்டு போய்ப் ‘பசிக்கிறது’ என்று உணர்த்தினாள். அவள் வாய் பேசவும், காது கேட்கவும் இயலாத மாற்றுத்திறனாளி என்று முதியவருக்குப் புரிந்தது.

“என்னிடம் இரண்டு பேருக்கான சாப்பாடுதான் இருக்குது” என்றார் முதியவர். “அப்படின்னா அதை எங்க ரெண்டு பேருக்கும் கொடுங்க” என்றார்கள், பேச முடிந்த சிறுமிகள்.

“ஏன் அந்தப் பொண்ணுக்குத் தரக்கூடாதா?” என்று கேட்டார் முதியவர். “நாங்கதானே பசின்னு வாயைத் திறந்து கேட்டோம். எங்களுக்குத்தான் சாப்பாடு கிடைக்கணும். அவ எங்களை மாதிரி இல்லை, வித்தியாசமானவள். அவ பட்டினி கிடக்கட்டும்” என்றார்கள் இந்தச் சிறுமிகள்.

“சரி, நீங்க உங்களுக்குக் கிடைக்கறதை அந்தப் பொண்ணோட பகிர்ந்துக்கலாமே?” என்று கேட்டார் முதியவர். இரண்டு சிறுமிகளும் மறுத்தார்கள். “அது எப்படிங்க ஐயா, நாங்க கேட்டு வாங்கினது எங்களுக்குத்தானே சொந்தம். இது எங்களுக்கே போதாதே” என்று கேட்டார்கள்.

‘‘நீங்க சொல்றதும் சரிதான். அது அவங்களுக்குத்தான் சொந்தம்” என்று இருவருக்கும் உணவுப்பொட்டலங்களைக் கொடுத்துவிட்டுப் போனார் முதியவர். உணவு கிடைக்காத மாற்றுத்திறனாளி சிறுமி ஏக்கத்துடன் போய் ஒரு மர நிழலில் தனியாக அமர்ந்தாள்.

சில நிமிடங்களில் முதியவர் மீண்டும் அங்கு வந்தார். இந்த முறை அவர் கையில் முன்பு கொடுத்ததைவிடப் பெரிய உணவு பார்சல் இருந்தது. வந்தவர் நேராக, மாற்றுத்திறனாளிச் சிறுமி அமர்ந்திருந்த மர நிழலுக்குப் போனார். பார்சலைப் பிரித்து அந்தச் சிறுமியின் எதிரே வைத்து, ‘சாப்பிடு’ என்று அவளிடம் சைகை மொழியில் சொன்னார்.

அந்தச் சிறுமியின் கண்கள் வியப்பில் விரிந்தன. அது பெரிய விருந்து சாப்பாடு போல இருந்தது. இனிப்பு, பக்கோடா, அப்பளம், பாயசம் என்று எல்லாம் உணவுடன் இருந்தன. அவள் திரும்பிப் பார்த்தாள். அவளை விட்டுவிட்டுச் சாதாரண உணவுப்பொட்டலங்களை முன்பு வாங்கிய மற்ற இரண்டு சிறுமிகளும் ஏக்கத்துடன் அவளைக் கவனித்தார்கள். மாற்றுத்திறனாளிச் சிறுமி அவர்களையும் தன்னுடன் சாப்பிட வருமாறு அழைத்தாள். இந்த எதிர்பாராத அன்பைக் கண்டு முதியவர் திகைத்தார்.

நாம் எதிர்பார்த்த ஒன்று கிடைக்காதபோது ஏமாற்றம் அடைந்துவிடக்கூடாது. அதைவிடச் சிறந்த ஒன்று நமக்கு எதிர்பாராத தருணத்தில் கிடைக்கலாம்.

## அன்பு காட்டுவோம்!

சிலர் நமக்குப் புதிராகத் தெரிவார்கள். அவர்களின் இயல்புகள் நமக்கு விசித்திரமாகத் தெரியும். அவர்களின் நடவடிக்கைகள் விநோதமாக இருக்கும். அந்தப் புதிரான மனிதர்களிடம் அன்பு காட்டச் சில டிப்ஸ்:

- ஒருவர் மிகக் குறைவாகப் பேசுகிறார், அப்படிப் பேசும்போதும் மிக வேகமாகப் பேசுகிறார் என்றால், நிறைய விஷயங்களை ரகசியமாகப் பாதுகாக்கிறார் என்று அர்த்தம். 'இப்படி எல்லாவற்றையும் மனதில் போட்டு வைத்தால் பாரம் தாங்காது' என அன்பாக உணர்த்துங்கள்.
- ஒருவர் சோகத்தில்கூட அழவில்லை என்றால், அவருக்கு மிகுந்த மன உறுதி என அர்த்தமில்லை. அவர் பலவீனமாக இருக்கிறார் என்றே அர்த்தம். அவரின் பலமாக நீங்கள் இருங்கள்.
- ஒருவர் வழக்கத்தைவிட வேகமாகச் சாப்பிடுகிறார் என்றால், அவர் பதற்றத்தில் இருக்கிறார் என்று அர்த்தம். அந்தப் பதற்றத்தின் காரணம் அறிந்து தீர்த்து விடுங்கள்.
- சின்னச்சின்ன விஷயங்களுக்கு எல்லாம் ஒருவருக்கு நிறைய கோபம் வருகிறது என்றால், அவருக்கு அன்பு தேவைப்படுகிறது என்று அர்த்தம். அவருக்கு நிறைந்த அன்பைக் கொடுங்கள்.

மனிதர்களைப் பார்த்துப் 'புதிர்' என விலக வேண்டாம், புரிந்துகொண்டு அன்பு செலுத்துவோம்!

## பகிர்ந்துகொண்டால் அன்பு நிலைக்கும்!

குடும்பத்தில் கணவன் – மனைவிக்கு இடையே பல சமயங்களில் தேவையற்ற போட்டி ஏற்படுகிறது. வாழ்வைப் பலரும் பந்தயம் போல நினைத்துக்கொள்வதுதான் பிரச்னைக்குக் காரணம். ஆணும் பெண்ணும் இணைந்து இல்லறத்தில் ஈடுபடும்போதுதான், வாழ்க்கை அர்த்தம் பெறுகிறது. உங்கள் வாழ்க்கை ஒரு புதிர்க் கட்டம் என்றால், அதை இட்டு நிரப்ப வரும் இன்னொரு கட்டம்தான் வாழ்க்கைத்துணை. நீங்கள் இல்லாமல் அவர் வாழ்வோ, அவர் இல்லாமல் உங்கள் வாழ்வோ முழுமை பெறாது என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.

வேலைகளையும் பொறுப்புகளையும் பரஸ்பரம் பகிர்ந்துகொள்வது, சச்சரவுகளைக் குறைத்து அன்பை நிலைக்கச் செய்யும். விட்டுக்கொடுப்பவர் என்றும் கெட்டுப்போனதில்லை. வாழ்க்கைத்துணையிடம் வெற்றி, தோல்வியை எதிர்பார்த்துப் போட்டி போடலாமா? அனுசரித்துச் சென்றால்தான் இன்பம் கூடும். வாழ்நாள் முழுக்க இன்பத்திலும், துன்பத்திலும், வெற்றிகளிலும், தோல்விகளிலும் இணைந்து பங்கெடுக்கும் இருவரும் ஒருவருக்கு ஒருவர் வாழ்க்கையில் துணையாக இருக்கிறார்கள்; இணையாகவும் இருக்கிறார்கள்.

வாழ்க்கைத்துணையைப் போற்றாமல், குடும்ப வாழ்வில் மகிழ்ச்சி நிலைக்காது. அன்பின் ஊற்றாகக் குடும்பம் இருக்க வேண்டும். குடும்பத்தினர் பொழியும் அன்புதான், ஒருவருக்குக் கிடைக்கும் மிகப்பெரிய ஆசீர்வாதம்.

## அன்பு ததும்ப வேண்டும்!

உறவுகளே இல்லாத தீவாக இங்கு யாரும் வாழ்ந்து முடிப்பது சாத்தியமில்லை. பெறுவதன் மூலம் நாம் வாழ்கிறோம்; கொடுப்பதன் மூலம் வாழ்விக்கிறோம். சூரியன் தரும் ஒளியைப் போலவும், மல்லிகை வீசுகிற மணம் போலவும், மலைகள் உருவாக்கித் தரும் நதியைப் போலவும் நம் ஒவ்வொருவரிடமும் நிபந்தனையற்ற அன்பு ததும்பி வழிய வேண்டும்.

குடும்பமும், குடும்பத்தினர் மீதான அன்பும்தான் இந்த உலகில் மிக முக்கியமான இரண்டு விஷயங்கள். வீடு எவ்வளவு பெரிதாக இருக்கிறது என்பது முக்கியமில்லை. அங்கு அன்பு இருக்கிறதா என்பதே முக்கியம். நிபந்தனையற்ற அன்பை வளர்த்துக்கொள்வதன் மூலமே குடும்பத்திலும் தேசத்திலும் உலகிலும் அமைதியைச் சாத்தியமாக்க முடியும்.

நம்மைச் சுற்றி இருப்பவர்கள் நமது காயத்துக்குக் காரணமாக இருக்கலாம். அதையே மனதில் நினைத்துக்கொண்டு கோபமும், வலியும் கொள்ளாமல் மன்னிக்கவும், மன்னிப்புக் கேட்கவும் பழகிக்கொண்டுவிட்டாலே நமது மனம் லேசாகிவிடும். கடந்த காலக் காயங்கள் வடுக்களாக நினைவில் தேங்காமல் தவிர்ப்பதற்கு அன்பு ஒன்றே தீர்வு.







## அன்புடன் பாராட்டுங்கள்!

சிலர் தங்களுக்கு உதவி செய்யும் பலரையும் பாராட்டி நன்றி சொல்வார்கள், அலுவலகத்தில் சக ஊழியரைப் பாராட்டுவார்கள், பல தேவைகளுக்காக மேலதிகாரிகளையும் பிரபலங்களையும் பாராட்டுவார்கள், செய்திகளில் பார்க்கும் சாதனையாளர்களையும் பாராட்டுவார்கள், தெருவில் பார்க்கும் யாரென்றே தெரியாத குழந்தையைக்கூடப் பாராட்டுவார்கள். ஆனால், காலம் முழுக்கத் தன்னுடன் வாழும் வாழ்க்கைத்துணையை நேரடியாகவும் பாராட்ட மாட்டார்கள்; மற்றவர்களிடமும் அவர் பற்றிய பாராட்டு மொழிகளைச் சொல்லமாட்டார்கள். 'நமக்கு இதையெல்லாம் செய்ய இவர் கடமைப்பட்டவர்' என்பது போன்ற நினைப்பு அவர்களுக்கு இருக்கும்.

சிலர் திருமணமான ஆரம்ப நாட்களில் பாராட்டியிருப்பார்கள். காலப்போக்கில் அது மறைந்தோ, மறந்தோ போயிருக்கும். திருமணம் முடிந்து இரண்டு மாதங்கள் ஆனதா, இருபது ஆண்டுகள் முடிந்ததா என்பதெல்லாம் முக்கியம் இல்லை. எல்லாத் தருணங்களிலும் வாழ்க்கைத்துணையைப் பாராட்ட வேண்டும்; அப்போதுதான் அதைவிட அதிக பாராட்டு உங்களுக்குத் திரும்பக் கிடைக்கும்.

அன்பாகச் சொல்லும் பாராட்டு வார்த்தைகளே உங்கள் வாழ்க்கைத்துணைக்கு மனநிறைவைத் தருகிறது; உங்கள் மீதான அன்பை அதிகரிக்கச் செய்கிறது. ''பாராட்டுகளைப் பரஸ்பரம் பொழிந்துகொள்ளும் தம்பதிகளுக்குள் இருக்கும் நெருக்கம் எத்தனை ஆண்டுகள் ஆனாலும் குறைவதில்லை; அவர்கள் பிரிவது பற்றி யோசிப்பதே இல்லை'' என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். உங்கள் வாழ்க்கையில் உங்களுக்குக் கிடைத்த மிகச்சிறந்த பரிசு, உங்கள் வாழ்க்கைத்துணைதான். ஒவ்வொரு நாளும் அவரைப் பல காரணங்களுக்காக, பலவிதங்களில் பாராட்டலாம். அதன் விளைவுகள் உன்னதமானவை.

## அன்பின் நான்கு விதிகள்!

- யாராவது உங்களுக்குப் பிரச்னை கொடுக்கிறார்களா? அவர்கள் கடந்த காலத்தில் செய்த நற்செயல்களை நினைத்துப் பாருங்கள். எவரேனும் தொல்லையாக இருக்கிறார்களா? எதிர்காலத்தில் அவர்களுடன் சேர்ந்துதான் வாழ வேண்டும் என்பதை நினைத்துப் பாருங்கள். இப்படிக் காலப்பயணம் செய்வது கனிவாக நடக்க உதவும்.
- அடுத்தவர்களுக்கு நாம் எதைக் கொடுக்கிறோமோ, அதையே நாம் எல்லோரிடமிருந்தும் பெறுகிறோம். வம்பைக் கொடுத்து வம்பைப் பெற வேண்டாம். அன்பைக் கொடுத்து அன்பையே பெறுவோம்.
- உங்களுடைய அன்பையும் நேரத்தையும், அதைப் பெறத் தகுதியாக இருப்பவர்களிடம் மட்டுமே பகிர்ந்துகொள்ளுங்கள்.
- புரிந்துகொண்டால் கோபம்கூட அன்பாகத் தெரியும், புரியவில்லை என்றால் அந்த அன்பும்கூட அர்த்தமற்றதாகத் தெரியும்!






# அன்பான மனிதர்களின் 10 குணங்கள்!

ஒருவரை அன்பான மனிதராக அடையாளப்படுத்துபவை எவை? எந்தச் சூழலிலும் அவர்கள் வெளிப்படுத்தும் குணங்கள்தான். நம் குடும்பம், நண்பர்கள், சுற்றத்தினர் என்று எல்லோரிடமும் நாம் என்ன மதிப்புப் பெறுகிறோம் என்பதற்கு ஆதாரம், அன்பான குணங்கள்தான். நேற்று இருந்ததைவிட இன்று மேம்பட்டிருக்கிறோம் என்பதை உணர்த்துபவை ஒருவரின் பண்புகள்தான். ஒருவருக்கு எப்படிப்பட்ட அன்பான குணங்கள் இருக்க வேண்டும்?

- அன்பான மனிதர்கள் எதிர்மறை உணர்வுகளையோ, ஆதிக்க குணத்தையோ வெளிப்படுத்துவதில்லை. கனிவும் கண்ணியமும் அவர்களின் அடையாளங்கள். அறிமுகம் இல்லாத மனிதர்களிடமும் அவர்கள் மரியாதை காட்டுவார்கள். அதுவே அவர்களை வித்தியாசப்படுத்திக் காட்டும்.
- அவர்களிடம் சுயநலம் இருக்காது. தாங்கள் ஒரு முடிவெடிக்கும்போது அடுத்தவர்களின் உணர்வுகளுக்கு அவர்கள் மதிப்புக் கொடுப்பார்கள். மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதும் அவர்களுக்கு எளிதில் புரியும். தங்களுக்குப் பிடிக்காத ஒருவரைக்கூட அவர்கள் மதிப்புடன் நடத்துவார்கள்.
- தங்கள் நேரத்தையும் பணத்தையும் உழைப்பையும் பற்றிக்கூடக் கவலைப்படாமல், அடுத்தவர்களுக்காக உதவிக்கரம் நீட்டுவார்கள். ஒரு வேலையை ஆரம்பித்தால், கூடுதல் உழைப்பைக் கொடுத்தாவது அதை முடித்துவிடுவார்கள்.
- அன்பான மனிதர்களிடம் பொறாமை உணர்வு இருக்காது. அடுத்தவர்களின் செயல்களை மனம்திறந்து பாராட்டுவார்கள். மற்றவர்களின் வெற்றிகளைத் தங்களின் வெற்றி போலக் கொண்டாடுவார்கள்.
- நன்றியுணர்வு அவர்களிடம் நிறைய இருக்கும். அடுத்தவர்கள் தங்களுக்குச் செய்யும் உதவிகளை, 'அவர் நமக்குச் செய்வதற்குக் கடமைப்பட்டவர்' என்பது போல அலட்சியமாக அணுக மாட்டார்கள். ஒரு சின்ன விஷயத்துக்குக்கூடப் பெரிதாக நன்றியை வெளிப்படுத்துவார்கள்.
- எப்படிப்பட்ட நெருக்கடியான சூழலையும் நேர்மறையாக அணுக அவர்களுக்குத் தெரியும். பிரச்னைகளைச் சந்திக்கும்போது, என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாற மாட்டார்கள். எப்படிப்பட்ட பிரச்னைக்கும் தீர்வு என்னவென்று திறந்த மனதுடன் யோசிக்க அவர்களுக்குத் தெரிந்திருக்கும். அவர்களிடமிருந்து வெளிப்படும் நேர்மறை உணர்வு, அவர்கள் இருக்கும் இடத்தையே மகிழ்ச்சியாக வைத்திருக்கும்.
- அவர்கள் சோர்வாக இருப்பதை நீங்கள் பார்க்கவே முடியாது. எப்போதும் உற்சாகமாக இருப்பார்கள். மகிழ்ச்சியைப் பரப்புவார்கள். தங்கள் புன்சிரிப்பால் எவரையும் அன்பால் வெல்ல அவர்களுக்குத் தெரியும்.
- அன்பான மனிதர்கள் எளிதில் எவரையும் நண்பராக்கி விடுவார்கள். இரும்பைக் காந்தம் இழுப்பது போல அவர்களால் மற்ற எவரும் ஈர்க்கப்பட்டு நெருங்கிவிடுவார்கள்.
- அன்பான மனிதர்கள் தங்கள் உறவுகளில் நேர்மையாக இருப்பார்கள். அவர்களின் நட்பு வட்டம் சிறியதாக இருந்தாலும், அவர்கள் அத்தனை பேரிடமும் நெருக்கமும் அக்கறையுமாக உறவாடுவார்கள். 'பார்த்து ரொம்ப நாளாச்சு', 'ஏன் ரொம்ப நாளா பேசவே இல்லை' என்பது போல யாரும் அவர்களைக் கேட்காதபடிப் பார்த்துக்கொள்வார்கள்.
- பகிர்ந்துகொள்வது அவர்களின் முக்கியமான ஒரு பண்பாக இருக்கும். தாங்கள் சம்பாதிக்கும் எல்லாமே தங்களுக்கானது அல்ல என்பதை அவர்கள் உணர்ந்திருப்பார்கள். தேவை இருக்கும் எவரிடமும் அவர்கள் எதையும் பகிர்ந்துகொள்வார்கள்.



Owned, Published by K.R. NAGARAJAN, Published from 10, Sengunthapuram Mangalam Road, TIRUPUR - 641 604 & Printed by B. ASHOK KUMAR at RATHNA OFFSET PRINTERS, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014. Editor : T.J. GNANAVEL




SUKRA® SUPER FINE COTTON VESTS | ROMEX® SUPERIOR BANIANS | RISE-UP® PREMIUM BANIANS | ACOSTE® LUXURY INNERWEARS | Breeze® Eye Let Vests | WinStripe® STRIPED BANIANS | ARCHERY® GYM VEST | COMPACT® PREMIUM COTTON RIB VESTS | LITTLE STARS® KIDS INNERWEARS

Available at Ramraj Showrooms and All Leading Textile Shops | Shop Online at www.ramrajcotton.in

Venmai Monthly - Postal Registration No.TN/TRU/28/2025-27. Registered with the Registrar of Newspapers for India under No.TNTAM/2016/68519. Day of Publishing 01-02-2026. Posted at Tirupur BPC on 5th of every month.

